# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# ANNUAL REPORT
# 2022

වැඩිහිටි තැනැත්තන් සඳහා වන
ජාතික සභාව සහ මහලේකම් කාර්යාලය
முதியோர்களுக்கான தேசிய
சபை மற்றும் தேசிய செயலகம்
National Council and Secretariat for Elders

**වැඩිහිටි තැනැත්තන් සඳහා වූ ජාතික සභාව සහ ජාතික වැඩිහිටි මහලේකම් කාර්යාලය**
**முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம்**
**National Council For Elders And National Secretariat For Elders**

**කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය.**
**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**
**Ministry of Women, Child Affairs and Social Emplowerment**

# பொருளடக்கம்


பொருளடக்கம்.................................................. 01

முகவுரை .................................................. 02

நிறைவேற்று அறிக்கை.................................................. 03

அறிமுகம் .................................................. 04

முதியோர்களுக்கான தேசிய செயலகம் .................................................. 05

தொலை நோக்கு .................................................. 05

பணிக்கூற்று .................................................. 05

நிறுவன கட்டமைப்பு 2022 ..................................................06

முதியோர்களுக்கான தேசிய சபை-2022.................................................. 07

முதியோர்களுக்கான தேசிய சபை தவிசாளரின் அறிக்கை-2022.................................................. 08

முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை-2022.................................................. 09

2022 ஆம் வருடத்தின் செயற்திறன் அறிக்கை.................................................. 17

சுய தொழில் புரியும் முதியோர்களுக்கு நிதி உதவி வழங்குதல் 2022.................................................. 17

முதியோர் அடையாள அட்டை வெளியிடுதல் 2022..................................................18

முதியோர் தாபரிப்பு (ஆவரண கெபகரு) நிகழ்ச்சித் திட்டம். ..................................................19

கதிர்காமம் சுற்றுலா விடுதி வருமானம் மற்றும் செலவு விபரம் 2022..................................................21

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை.................................................. 22

திறைசேரி நிதியம்..................................................24

2022 டிசம்பர் 31 திகதிய நிதி நிலவரா அறிக்கை..................................................24

2022 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் அறிக்கை..................................................26

2022 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிறைவேற்று அறிக்கையின் மாற்றங்கள்..................................................27

2022 டிசம்பர் 31 திகதிய நிதிபாய்ச்சல் கூற்று .................................................. 28

2022 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலவர அறிக்கையின் குறிப்புகள்..................................................30

சமூகப் பாதுகாப்பு நிதியம்..................................................45

2022 டிசம்பர் 31 திகதிய நிதி நிலவரா அறிக்கை..................................................45

2022 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் அறிக்கை..................................................47

2022 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிறைவேற்று அறிக்கை மாற்றங்கள்..................................................49

2022 டிசம்பர் 31 திகதிய நிதிபாய்ச்சல் கூற்று ..................................................50

2022 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகயின் குறிப்புகள்..................................................52

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..................................................60

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பதில்கள் ..................................................70

## முகவுரை

இலங்கை முதியோர்களின் சுய கௌரவம், சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு, மற்றும் அபிமானம் உள்ளடங்களான முதியோர்களின் நலன்புரி மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதற்காக, 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டடின் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் முதியோர்களுக்கான தேசிய பேரவை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

முதியோர்களின் சுய கௌரவம், சுதந்திரம், பங்களிப்பு, பாதுகாப்புக்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் வினைத்திறனான மற்றும் சேவை ஒன்றை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளமை முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முதன் நிலை செயற்பாடுகளாகும். இதனடிப்படையில் தற்போதைய அரசின் குறிக்கோள் மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பற்களிப்பினையும் கவனத்திற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் இலங்கை முதியோர் சமூகத்திற்கு பல பயனுள்ள சேவைகளை செய்ய முடிந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2022 ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள முதியோர் சமுதாயத்தின் நலன்புரி, உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் நோக்கில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்திறன் அறிக்கையினை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்வைப்பது 2022 ஆம் வருட அறிக்கையின் பிரதான நோக்கமாகும்.

## நிறைவேற்று அறிக்கை

2022 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை இலங்கை பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் கணிசமான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றமொன்றை சுவீகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.

தற்போதைய அரசின் "செழிப்புப் பார்வை" கொள்கை அறிக்கையின் கீழ் 70 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பிரஜைகளுக்கு ரூபா. இரண்டாயிரம் வாழ்வாதார கொடுப்பனவு உதவியினை வழங்குதல் பிரதானமானது என்பதுடன், நடைமுறையிலுள்ள சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தகை அமைச்சின் கீழ் கௌரவ அமைச்சர மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர் குழாம் இது தொடர்பில் காட்டிய ஆர்வத்தினை மிகவும் பாராட்டுதல் வேண்டும்.மேலும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தகை அமைச்சின் செயலாளர் மற்றும் அந்த அமைச்சின் அலுவலக உத்தியோகத்தர்கள், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகும்.

இருந்தும் மாவட்ட செயலகங்களில் மற்றும் பிரதேச செயலகங்களில் முதியோர்களின் விடயங்களுக்கு தொடர்புடைய கடமைகளை மேற்கொள்ளும் உள்ளடக்கிய அலுவலகர்களின் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகும்.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டின் பௌதீக மற்றும் நிதி இலக்குகள் தொடர்பாக நாங்கள் அடைந்த செயல்திறன் பற்றிய தொடர்புடைய தகவல்கள் பின்வரும் பக்கங்களில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.

## அறிமுகம்

கடந்த பல தசாப்தங்களாக நாட்டில் தொடர்ந்து இடம்பெறும் சமூக, பொருளாதார அபிவிருத்திகளின் விளைவாக சுகாதார, ஊட்டச் சத்து, கல்வி ஆகிய துறைகளில் தென்படும் மேம்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் விளைவாக பிறப்பு இறப்பு விகிதத்தில் வீழ்ச்சி, எதிர்பார்க்கும் ஆயுட்காலம், முதியோர் சனத்தொகையின் அதிகரிப்பு ஆகியன காணப்படுகின்றன. இதன் பிரகாரம், தற்போதைய 14.6% வீதமாகக் காணப்படும் முதியோர் சனத்தொகை எதிர்கால இரு தசாப்தங்களுக்குள் நாட்டின் முதியோர் சனத்தொகையின் விகிதமானது 21% ஆக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோர்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நலன்புரி வசதிகளை தரமுயர்த்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படல் வேண்டும். இதனை அடைவதற்காக முதியோர்களுக்கான தேசிய செயலகம் உயர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. 2022 ஆம் வருடத்தில் முதியோர் சமூகத்தை வலுவூட்டுவது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சிரேஷ்ட பிரஜைகளுக்கு சுய-தொழில் புரிவதற்காக நிதி உதவிகளினை வழங்குதல், கிராமிய முதியோர் சங்கங்கள், பிரதேச முதியோர் அமைப்புக்கள் மற்றும் மாவட்ட முதியோர் அமைப்புக்கள் (சங்கங்கள்) போன்றவற்றினை வலுவூட்டுதல், குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்கு ரூபா. 2,000/- கொடுப்பனவு வழங்குதல் மற்றும் 100 வயதினைப் பூர்த்தியடைந்த சிரேஷ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா. 5,000/- கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கண் வில்லைகள் வழங்குதல் மற்றும் செவிப்பறை உபகரணங்கள் வழங்குதல், முதியோர் இல்லங்களை தர நிர்ணயப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு முதியோர் இல்லங்களுக்கு நிதி உதவிகள் வழங்குதல், முதியோர்களின் ஆரோக்கிய நலனை மேம்படுத்துதலுக்காக குறைந்த பட்ச வசதிகளுடனான மலசல கூட வசதிகளை வழங்குதல் போன்ற இவ்வாறான செயற்திட்டங்கள் முதியோர் சமூக பாதுகாப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் முதியோர்களின் உளநிலை மற்றும் ஆன்மீக விருத்திகளை மேம்படுத்த உளவியல் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் பராமரிப்பாளர்களைப் பயிற்றுவித்தல் என்பன எம்மால் முன்னுரிமைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் சிலவாகும்.

அதனூடாக முதியோர்கள் தனிமையில் வாழ்ந்து வருவதைத் தடுப்பதும் சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலும், உடலியல், உளவியல் மற்றும் ஆன்மீக விருத்தியினை ஏற்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் எங்களது நோக்கமாகும்.

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் முதியோர்களுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான தேசிய பேரவையும்; நிறுவப்பட்டுள்ளன.

## தொலை நோக்கு

இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை நோக்கிக் கொண்டு செல்லுதல்

## பணிக்கூற்று

“முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு, கௌரவத்தினை உறுதிப்படுத்துதல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புரிய வைத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது எமது பணியாகும்”

## நிறுவனக் கட்டமைப்பு 2022



## முதியோர்களுக்கான தேசிய பேரவை-2022




| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திரு. நீல் பண்டார ஹபுகின்ன | தவிசாளர் |
| 02. | திரு.சீ.டீ.களுஆரச்சி | உதவிசாளர் |
| 03. | திரு. கே.ஜீ.லெனரோல் | செயலாளர் |
| 04. | திரு.எம்.எம்.எ.யூ.ஹேரத் | சபை உறுப்பினர் |
| 05. | சிரேஷ்ட பேராசிரியர். எல். திசாநாயக்க | சபை உறுப்பினர் |
| 06. | வைத்தியர்.சிரோமி மாதுவகே | சபை உறுப்பினர் |
| 07. | பேராசிரியர். கொன்கஸ்தென்ன ஆனந்த தேதர் | சபை உறுப்பினர் |
| 08. | திரு.சமந்த லியனவடுகே | சபை உறுப்பினர் |
| 09. | திரு. ஜீ.வீ.ஏ.த.சில்வா | சபை உறுப்பினர் |
| 10. | சட்டத்தரணி. டீ.எம்.ஜே.சுமேத | சபை உறுப்பினர் |
| 11. | லுதினல். கர்ணல் எஸ்.எம். சீ. சுனில் சிறிவர்தன | சபை உறுப்பினர் |
| 12. | வைத்தியர். பத்மா குணரத்தன | சபை உறுப்பினர் |
| 13. | திரு.மஹிந்த மடிஹேவா | சபை உறுப்பினர் |
| 14. | திருமதி. டீ.டி. சுதர்சன் | சபை உறுப்பினர் |
| 15. | திருமதி. எச்.வஜீர சிறி ஸ்வர்ண பண்டார | சபை உறுப்பினர் |
| 16. | திரு. ஏ.டீ.ஆர்.ஏ.டப்லியூ. ஞானசிறி | சபை உறுப்பினர் |

## முதியோர்களுக்கான தேசிய பேரவைத் தவிசாளர் அவர்களின் அறிக்கை-2022

தற்போது நாட்டில் முதியோர் சனத்தொகையின் வளர்ச்சி, ஒரு சமூகப் பிரச்சினை ஒன்றாக வளர்ந்து விட்டது. நாளுக்கு நாள் துரித கதியில் முதியோர் சனத்தொகை உயர்வடைந்து காணப்படுதல் எதிர்காலத்திற்குப் பிரச்சினை ஒன்றில்லாதவாறு, முதியோர் சமுதாயத்தின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கென திட்டங்களைத் திட்டமிடும் பிரதான பொறுப்பு எமது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணியினை நிறைவேற்றுவதற்கு "2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தச் செய்யப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் மூலம்" கிடைக்கப் பெற்ற அதிகாரங்களின் பிரகாரம் முதியோர்களுக்கான தேசிய பேரவை, அது தொடர்பில் கொள்கைசார் தீர்மானத்தினை எடுத்தல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம், அச்செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடுகள் செய்யப்பட்டு அமுலாக்கப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் "முதியோர் நலன்புரி தொடர்பிலான தேசிய நிதியத்தின்" ஊடாக முதியோர் நலன்புரிச் சேவைகளை மிகவும் பரந்த முறையில் சாதகமான பெறுபேறுகளை எதிர்பார்த்து விரிவுபடுத்துவதற்கு ஆரம்பித்துள்ளோம்.

இவ் விடயங்களை நிறைவேற்றுவதில் பிரதான பொறுப்பினை வகிக்கும் முதியோர்களுக்கான தேசிய சபை, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் உள்ளடங்களாக, ஊழியப் சபையினர் அர்ப்பணிப்புடன் செய்யும் பணி பாராட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், பிற பிரத்தியேக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், தமது நேரம், முதியோர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கென அர்ப்பணிப்புடன் செய்யப்படும் பணியினை பாராட்டுவதுடன், எனது நன்றியினை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனினும், இயன்றளவில் இலங்கையில் 3 மில்லியனுக்கும் அதிகமான முதியோர் சனத்தொகையினரின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினை இவ்வாறான நிறுவனத்திற்கு வரையறை செய்து நிறைவேற்றுதல் பாரிய சவாலானதாகும் என்பதுடன், பெரிய சவாலாகவும் கடினமான பணியாகவும் இருப்பதால், பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் உறுதிப்பாட்டுடனான குடும்பத்தை முதன்மையாகக் கொண்ட ஒட்டுமொத்த சமுதாயமும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டிய தரணம் வந்துவிட்டதாக நான் உணர்கிறேன். ஒட்டு மொத்த சமூகத்தினால் துரித கதியில் அதிகரிக்கும் முதியோர் சனத்தொகையின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கு அர்ப்பணித்துள்ள முதியோர்களுக்கு பாதுகாப்பான நாளைய தினமொன்றினை முன்னிட்டு செயற்படுவதற்கு காலம் கனிந்துள்ளது என்பதை நான் நன்கு உணர்கின்றேன்.

நீல். பண்டார ஹபுகின்ன
செயலாளர்

மகளிர்,சிறுவர் அலுவல்கள் மற்றும்
சமூக வலுப்படுத்தகை அமைச்சு

தவிசாளர்
முதியோர்களுக்கான தேசிய பேரவை

## முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளரின் அறிக்கை - 2022

முதியோர்களுக்கான தேசிய பேரவையின் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நிச்சயிக்கப்பட்ட வழிமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டில் அடைந்துள்ள செயற்திறன் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**<u>சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு</u>**

- **70 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான ரூபா 2,000/- கொடுப்பனவு**

  பெருமை வாய்ந்த சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு, முதியோர்களின் நலனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு மரியாதைக்குரிய மற்றும் ஆதரவான கையை வழங்க வேண்டும் என்பதற்காக.70 வயதினைப் பூர்த்தி செய்த மூத்த பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா. 2000/- கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2,000/- வழமையான கொடுப்பனவு பெறும் பயனாளிகளுக்கு மேலதிக (TOP UP) கொடுப்பனவு எனும் அடிப்படையில் ரூபா. 3,000/- நிதி வழங்கப்பட்டது. காத்திருப்பிலுள்ள முதியோர்களுக்கு ரூபா. 5,000/- கொடுப்பனவு வழங்குதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- **100 வயதினைப் பூர்த்தியடைந்த சிரேஷ்ட பிரஜைகள் தொடர்பில் ரூபா. 5,000/- கொடுப்பனவு.**

  100 வயதினைப் பூர்த்தியடைந்த சிரேஷ்ட பிரஜைகள் நாட்டின் முக்கியமான குழுவாகக் கருதவேண்டியுள்ளது. 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கக் கூடியதும். ஒரு தேசத்தை நிறுவுவதற்கான ஒரு அளவுகோலாகக் கருதலாம், ஒரு புறம் இது தேசியப் பெருமைக்குரிய விடயமாகும். இதனடிப்படையில் 100 வயதினைப் பூர்த்தியடைந்த சகல முதியோர்களுக்காகவும், மாதாந்தம் ரூபா. 5,000/- கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதோடு, ரூபா. 5,000/- வழமையான கொடுப்பனவு பெறும் பயனாளிகளுக்கு (TOP UP) **கொடுப்பனவு எனும் அடிப்படையில் ரூபா. 2,500/- நிதி வழங்கப்பட்டது.**

**<u>திறைசேரி நிதியினூடாக செயல்படுத்தப்படும் முதியோர் நலன்புரி செயற்திட்டங்கள்.</u>**

**01. பயிற்சி, ஆய்வுகள், மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.**

**“குழந்தைகளின் உலகம் - முதியோர்கள்”** முதியோர்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். இதனூடாக பிள்ளைகள் மற்றும் முதியோர்களுக்கிடையில் ஆளிடைத் தொடர்பினை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சியின் கீழ் 2022 ஆம் வருடம் தொடர்பில் ரூபா. 0.70 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததோடு, 17 நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா. 0.48 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது

**02. முதியோர் அடையாள அட்டை விநியோகம்.**

சிரேஷ்ட பிரஜைகளுக்கு அரசாங்க விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட உயர் தரமான மற்றும் தரமான அடையாள அட்டையை வழங்குதல் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக 2022 ஆம் ஆண்டிற்குள் ரூபா. 2.55 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை, வருடத்திற்குள் புதிய அடையாள அட்டைகள் 50,082 விநியோகிப்பதற்காக ரூபா. 2.16 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

**03. முதியோர்களுக்கு மிகவும் சிறந்த வசதிகளை வழங்கும் பொருட்டு முதியோர் இல்லங்களை பரிபாலனம் செய்தல், நிதி உதவி வழங்குதல் மற்றும் முதியோர் இல்லங்களை கண்காணிப்புச் செய்தலும்**

நாடு பூராகவும் அமைந்துள்ள 306 முதியோர் இல்லங்களிலும் பராமரிக்கப்படும் முதியோர்கள் தங்களது வயதான காலத்தில் அர்த்தமுள்ளதாகவும், மகிழ்ச்சியாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் பிரயோசனமாகவும் கழிப்பதற்கு நாடு பூராகவுமுள்ள ஒவ்வொரு முதியோர் இல்லங்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக செய்யப்படும் சிறிய அளவிலான (செலவு) அத்தியவசிய கோரிக்கைகளின் அடிப்படையில் புதுப்பித்தல், உபகரணங்கள் மற்றும் ஏனைய அத்திய அவசிய தேவைகளுக்காக உதவிகள் இதனூடாக வழங்கப்படுகின்றன.

மேலும் இலங்கை பூராகவும் தற்போதுள்ள அரச மற்றும் தனியார் துறை முதியோர் இல்லங்களின் நிலைமைகள், ஏற்கனவே உள்ள குறைபாடுகள் மற்றும் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதன் மூலம் முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோர்களுக்கு நல்ல மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் நிர்வகிக்கப்படும் கதிர்காமம் அரச முதியோர் இல்லம் மற்றும் மாளிகாதென்ன எவ்ஜின் நோனா முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செலவுகள், தொடர்ந்தேர்ச்சியியான செலவுகள் மற்றும் அத்தியாவசிய பராமரிப்புச் செலவுகளை இதனால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா. 1.56 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு ரூபா. 1.54 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

**04. ஊடகங்கள் மற்றும் வெளியீடுகள்**

“வெறிகரமான முதியோர் வாழ்விற்கான பாதை” புத்தகம் அச்சிடுதல், புத்தகசாலை (நூலகம்) நடைமுறைப்படுத்திச் செல்வது தொடர்பில் புதிய புத்தகங்களை கொள்வனவு செய்வதல் போன்ற ஊடகங்கள் மற்றும் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக வேண்டி இவ்வருடத்திற்குள் ரூபா. 3.51 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு 2022 ஆம் வருடத்திற்குள் ரூபா. 1.37 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

**05. மேற்பார்வை மற்றும் நிர்வாகச் செலவுகள்.**

70 வயதினைப் பூர்த்தியான குறைந்த வருமானமுடைய சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுக்குறிய மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் நடவடிக்கைகளுக்குத் தேவையான கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவுக்குறிய சான்றிதழ் பத்திரம், லெஜர் (நாற்குறிப்பேடு) அச்சிடுதல் தொடர்பில் நிதி வழங்குதல் இதன்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2022 ஆம் வருடம் தொடர்பில் ரூபா. 6.40 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு ரூபா. 5.15 மில்லியன் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

06. முதியோர்களுக்கான நீதிச் சலுகைகள் வழங்குதல்

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தினால் முதியோர்களுக்கான தேசிய சபை தாபிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையினை நடாத்துதல், உறுப்பினர்களுக்கான ஊதியம் வழங்குதல் மற்றும் இது தொடர்பான செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தின் மீள் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை, 5 உறுப்பினர்களைக் கொண்ட நீதித் துறைச் சேவை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட நீதித் துறை அதிகாரங்களைக் கொண்ட நிறுவனமாகும். அதன் உறுப்பினர்களுக்கான ஊதியம் வழங்குதல் மற்றும் சிற்றுண்டிச் செலவுகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்துவத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக 2022 ஆம் வருடத்தில் ரூபா. 3.78 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, ரூபா. 2.98 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

**07. முதியோர்களுக்கான சுய தொழில் நிதி உதவி வழங்குதல்.**

சுய-படைப்புத் திறன்கள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக முதியோர் சமூதாயத்தினரை வலுவூட்டுவதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு ரூபா. 30,000/- அதிக பட்சத் தொகையின் கீழ் சுய தொழில் உதவி வழங்கப்பட்டது. இதன்படி 2022 ஆம் ஆண்டில் ரூபா. 5.22 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதோடு முதியோர் சுய-தொழில் பயனாளிகள் 182 பேர்களுக்காக நிதி அனுசரனை வழங்கும் பொருட்டு ரூபா. 5.22 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

08. முதியோர் சங்கங்கள்/ அமைப்புக்களை வலுவூட்டுதல்.

முதியோர் அமைப்புக்களை வலுவூட்டுதல் தெடர்பில் புதிய சட்ட விதிமுறைகளினைத் தயாரிப்பத்தல் இதன் கீழ் மேற்கொள்ளப்படுள்ளன. 2022 ஆம் வருடத்தில் ரூபா. 1.52 மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ள அதேவேளை ரூபா. 1.33 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

09. சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம்.

சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் மற்றும் மாவட்டச் செயலகங்களை மையமாகக் கொண்டு முதியோர் விழாக்களை நடாத்துவதற்காக 2022 ஆம் வருடத்தில் ரூபா. 0.5 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், இதற்காக 0.18 மில்லியன் ரூபா நிதிச் செலவும் மேற்கொள்ளப்பட்டது.

### 10. ஏனைய செலவுகள்.

முதியோர் நலன்புரியினை மேம்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு 2022 ஆம் வருடத்திற்கென ரூபா. 0.6 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, இதன் நிமித்தம் ரூபா. 0.06 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

## <u>சமூக பாதுகாப்பு நிதியினூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட முதியோர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித் திட்டம்.</u>

### 01. முதியோர் இல்லங்களைத் தரப்படுத்தல், பதிவு செய்தல் மற்றும் தற்போது செயற்பட்டுவரும் முதியோர் இல்லங்களை புதிதாக நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மானம் செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

சகல முதியோர் இல்லங்களும் இலங்கை தர நிர்ணயம் 1506:2015 / முதியோர் இல்லங்கள் தொடர்பிலான இலங்கை தர நிர்ணயம், இலங்கை தர நிர்ணய நிருவனத்தின் தரப்படுத்தலில் உள்ளடங்கப்பட்டுள்ளவாறு தர நிர்ணயப்படுத்தல். இலங்கை பூராகவும் செயற்பட்டுவரும் 10 முதியோர் இல்லங்களையும் புனர் நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்கள் வழங்கும் பொருட்டு ரூபா. 25.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுந்த்தோடு, வருடத்திற்குள் ரூபா. 11.96 மில்லியன் நதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

இதில் ஒரு முதியோர் இல்லத்திற்கென ரூபா. 2 மில்லியன் அதிகபட்ச தொகையின் கீழ் நிதி வழங்கப்படும். மேற்கூறப்பட்ட தர நிர்ணயத்திற்கு ஏற்ப ஒவ்வொரு முதியோர் இல்லமும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வகையில் தேவையான பௌதீக வளங்களான கட்டட நிர்மானத்திற்கென இந்த நிதி பயன்படுத்தப்படும். பிரதேச செயலாளர்களினால் சம்பந்தப்பட்ட அதிகார எல்லைக்குள் பராமரிக்கப்படும் முதியோர் இல்லங்களைத் தரப்படுத்தலுக்காக விண்ணப்பங்கள் கோரப்படும் அதேவேளை, இதற்குறித்தான தகுதியான மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதியோர் இல்லங்களுக்காக நிதி (நிதி நிபந்தனைகள் உட்பட) வழங்கப்படும். இந்த நோக்கத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்குள் ரூபா. 100.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததோடு, வருடத்திற்குள் ரூபா. 19.01 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது

### 02. செவிப்பறை உபகரணம் வழங்குதல்.

செவிப்புலண் பாதிப்புற்ற விசேட தேவையுடைய முதியோர்களுக்கு செவிப்பறை உபகரணம் வழங்குதல் இதில் இடம்பெறுகின்றது. இதன் பொருட்டு 2022 ஆம் வருடத்திற்குள் ரூபா. 5.43 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததோடு, ரூபா. 5.43 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது. இவ் வருடத்திற்குள் பிரதேச 123 செயலகங்களுக்கு 300 செவிப்பறை உபகரணம் வழங்கப்பட்டுள்ளது.

**03. முதியோர் பகல்நேர மையங்கள் தொடர்பில் நிதி உதவி வழங்குதல்.**

முதியோர் பகல்நேர **மையங்களுக்குத்** தேவையான உபகரணங்கள், (மேசை, அலுமாரி உள்ளடங்களான ஏனையவைகள் ) கோரிக்கைகளுக்கு அமைவாக நிதி உதவி வழங்குதல் இதன் ஊடாக இடம் பெறுகின்றன. இதன் பொருட்டு வருட இறுதிக்குள் ரூபா.175.0 மில்லியன் நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளதோடு, பிரதேச செயலகங்கள் 25 முதியோர் பகல்நேர நிலையங்களுத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு நிதி வழங்கும் பொருட்டு ரூபா. 56.34 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

**04. கிராமிய முதியோர் சங்கங்கங்களினை வலுவூட்டுதலின்**

கிராமிய முதியோர் சங்கங்கங்களினை வலுவூட்டுதலின் கீழ் முதியோர் சங்கங்களை சக்திமிக்கதாக்கும் பொருட்டு இதன் பொருட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் தேவையான தளபாடங்களை பெற்றுக்கொள்வதற்காக கிராமிய சங்கத்திற்கென ( ரூபா. 100,000/- ஒரு லட்சம் அதிக பட்சத் தொகையின் கீழ்) நிதி பங்களிப்பு வழங்குதல் இடம்பெறும். இதனடிப்படையில் 2022 ஆம் வருடத்தில் 671 சங்கங்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. 2022 ஆம் வருடம் இதற்காக ரூபா. 99.9 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததோடு ரூபா. 67.43 மில்லியன் நிதி செலவும் செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

**05.** மூலோபாயத் திட்டம் தயாரித்தல்.

முதயோர்களுக்கானதேசியசெயலகத்தின் எதிர்வரும் 05 வருட காலத்திற்கான மூலோபாயத் திட்டம் தயாரித்தல்தொடர்பில் 2022 ஆம் வருடத்தில் ரூபா. 0.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை அதில் ரூபா. 0.32 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

**06. முதியோர்கள் தங்களது வீட்டுக்குள் வாழ்வதற்குத் தேவையான குறைந்த பட்ச மற்றும் மலசல கூட வசதிகளை வழங்குதல்.**

60 வயதினைப் பூர்த்தியடைந்த முதியோர்கள் தங்களது வீட்டிற்குள் வாழ்வதற்குத் தேவையான அவசியமான குறைந்த பட்ச வசதிகள் மற்றும் மலசல கூட வசதிகள் ( கொமட், கட்டில் மெத்தை, கைப்பிடி மற்றும் வீட்டினை புனர் நிர்மாணம் செய்தல்) வழங்குவதன் பொருட்டு கோரிக்கைகளுக்கமைவாக ஒரு பிரதேச செயலகத்திற்கென ரூபா. 0.45 மில்லியன் அதிக பட்சத் தொகையின் கீழ் 219 பிரதேச செயலகங்களின் 2518 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் வருடத்திற்கென ரூபா. 112.25 மில்லியன் ஒதுக்கீட்டு செய்யப்பட்டு இதில் ரூபா. 112.08 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

**07. மாவட்ட மீளாய்வுக் கூட்டம் நடாத்துதல்.**

மாவட்ட மட்டங்களில் முதியோர் கடமைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நடாத்துவதற்கு 2022 ஆம் வருட இறுதிக்குள் 25 மாவட்டங்களும் மீளாய்வுக் கூட்டம் 25 நடாத்தப்பட்டுள்ளதோடு, இன்பொருட்டு வருட

இறுதிக்குள் ரூபா. 1.3 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை இதில் ரூபா. 0.34 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

**08. நிர்வாக செலவு**

சமூக பாதுகாப்பு நிதியின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களிற்கான நிர்வாக செலவினங்கள் உள்ளடங்கப்படுகின்றன. இதன் பொருட்டு 2022 ஆம் வருடத்திற்கென ரூபா. 0.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூபா. 0.02 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

09. **பன்னல வெல்கம் விலேஜ் முதியோர் இல்லத்தினது பரிபாலன நடவடிக்கைகள்.**

பன்னல வெல்கம் விலேஜ் முதியோர் இல்லத்தின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் இதர நடவடிக்கைகளுக்காக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் 2022 ஆம் வருடத்தின் பொருட்டு ரூபா. 10.00 நிதி ஒதுக்கிடப்பட்ட அதேவேளை அதில் ரூபா. 9.99 நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

**10. கதிர்காமம் புதிய முதியோர் இல்ல கட்டட நிர்மானம்.**

கதிர்காமம் புதிய முதியோர் இல்ல கட்ட நிர்மான நடவடிக்கைகளுக்காக வருடத்திற்குள் ரூபா. 195.0 மில்லியன் நிதி செய்யப்பட்டுள்ளதோடு, இதில் மூலதனச் செலவினம் தொடர்பில் ரூபா. 189.93 உம் ரூபா. 1.84 மில்லியன் நிதி மீள் செலவினங்களிற்காகவும் 2022 ஆம் வருடம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**11. ஆரோக்யா சுகாதார (மருத்துவ) நிகழ்ச்சித் திட்டம்.**

2022 ஆம் வருட ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சியின் கீழ் புற்றுநோய், சிறுநீரக நோய், பாரிச வாதம் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள முதியோர் ஒருவருக்கு ஒரு தடவை மாத்திரம் ரூபா. 25,000/- நிதி உதவி வழங்கப்படும். 60 வயதினைப் பூர்த்தியடைந்திருப்பது கட்டாயம் என்பதோடு, மருத்துவ பரிசோதனை, மருந்து வில்லைகளை கொள்வனவு செய்தல், மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்து வசதிகளுக்காக இந் நிதி வழங்கி வைக்கப்படும். 2022 ஆம் ஆண்டில் 996 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக ரூபா. 24.98 மில்லியன் நிதி முன்னேற்றம் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, இதற்காக ரூபா. 25.00 மில்லியன் நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது.

**12. முதியோர் பராமரிப்புச் சேவை**

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் முதியோர் இல்லங்களில் கடமையாற்றும் நிர்வாகிகள், பராமரிப்பாளர்களான ஆண்,பெண் போன்றோர்களுக்கு முதியோர் பராமரிப்பு பயிற்சி இதனூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 ஆம் வருடம் களுத்துறை, கேகாலை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இந் நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் ரூபா. 2.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை அதில் ரூபா. 1.52 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

13. **கம்பஹா மாரகஹலந்த காணி அபிவிருத்தி**.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்குச் சொந்தமான கம்பஹா மாரகஹலந்த காணியினைப் பாதுகாக்கும் பொருட்டு வேலி மற்றும் நுழைவாயில் நிர்மான அபிவிருத்திக்காக 2022 ஆம் வருடம் ரூபா. 0.73 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு, ரூபா. 0.73 மில்லியன் நிதி செலவும் செய்யப்பட்டுள்ளது.

14. "**திரிய பியச" வீட்டுத் திட்டம்**

சமூக பாதுகாப்புப் பெறக்கூடிய முதியோர்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்திற்காக வீடு நிர்மாணித்தல் மற்றும் பனர்நிர்மானம் ( ஒரு வீட்டிற்காக ரூபா. 0.3 மில்லியன் எனும் அடிப்படையில்) மேற்கொள்ளும் பொருட்டு 2022 ஆம் வருடம் ரூபா. 25.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு, அதில் 50 வீடுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா. 25.00 மில்லியன் நிதி முன்னேற்றமும் பெறப்பட்டுள்ளது.

15. **பாதிக்கப்பட்ட முதியோர் இல்லங்களுக்கு நிதி உதவி வழங்குதல்**.

கொரோனா தொற்றுப் பரவலிலிருந்து முதியோர்களைப் பாதுகாக்கும் பொருட்டு முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோர்களுக்கு அத்தியவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி இதன் கீழ் இடம்பெற்றுள்ளது. இதன் பொருட்டு 2022 ஆம் வருடம் ரூபா. 2.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதோடு ரூபா. 0.46 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

16. சுற்றுலா யாத்திரை நிகழ்ச்சித் திட்டம்

ஆன்மீக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இத்திடம் செயற்படுத்தப்பட்டு அதற்காக ரூபா. 6.50 மில்லியன் 2022 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்டு 135 புனித யாத்திரைகள் மேறகொள்ளப்பட்டது. இதற்காக ரூபா. 6.49 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

17. சரண முதியோர் இல்லத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

தெஹியத்தகண்டிய சரண முதியோர் இல்ல நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதோடு, அதனைப் பராமரித்து வருபவர்களுக்கு சம்பளம்செலுத்துவதற்கு 2022 ஆம் வருடம் ரூபா. 0.22 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த்தோடு, ரூபா. 0.22 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

18. முதியோர் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டம்.

முதலாம் கட்டத்திற்குள் ரூபா. 2000/-கொடுப்பனவுபெறும் முதியோர் பயனாளிகளுக்கு காப்புறுதித் திட்ட முறை ஒன்று 2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை அதன் முதலாவது கட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா. 0.15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த அதேவளை ரூபா. 0.08 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

19. **டிஜிட்டல் தொழில்நுட்பம் அறிவு மற்றும் ஊக்கப்படுத்தல் தொழில் ஈட்டும் நிகழ்ச்சித் திட்டம்**

முதியோர்களுக்கு டிஜிட்டல் தொழில் நுட்ப அறிவினை வழங்குதல், யோகா பயிற்சி மற்றும் பொருளாதார செயல்முறைகளுக்கு பங்களிக்கும் பங்களிக்கும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், தொலுவ பிரதேச செயலகத்தில் முன்னோடி திட்டமாக கொண்டு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் ரூபா. 0.75 ஒதுக்கப்பட்டு ரூபா. 0.59 நிதி முன்னேற்றம் அடைந்துள்ளத

20. **கிராமிய முதியோர் சங்கத்திலுள்ள பொருளாலர்களுக்கு விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சி**

**கிராமிய முதியோர் அமைப்புக்களில் தவிசாளர், செயலாளர், மற்றும் பொருளாலர் போன்றோர்களுக்கு நிதி நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 24 இதன் கீழ்மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2022 ஆம் வருடத்தில் ரூபா. 0.70 மில்லியன் நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ள அதேவேளை அதில் ரூபா. 0.64 மில்லியன் நிதி முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது.**

21. **கதிர்காம்ம் முதியோர் இல்லத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

**கதிர்காமம் முதியோர் இல்லத்தில் தங்கி வாழும் முதியோர்களுக்கு தாணம் வழங்குதல் மற்றும் சுகாதார பொருட்களைப் கொள்வனவு செய்தல் போன்றவற்றிற்காக 2022 ஆம் வருடம் ரூபா. 0.5 மில்லியன் நிதி மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை, அதில் ரூபா. 0.41 முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.**

**கே.ஜீ.லெனரோல்**
**பணிப்பாளர்,**
**முதியோர்களுக்கான தேசிய**
**செயலகம்.**

**2022 - ஆம் வருடத்தின் செயற்திறன் அறிக்கை.**

**சுய தொழில் புரியும் முதியோர்களுக்கான நிதி உதவி வழங்குதல் -2022**

| மாகாணம் | மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் மாகாணம் | களுத்துறை | 06 |
| | கொழும்பு | 07 |
| | கம்பஹா | 09 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | 09 |
| | கண்டி | 13 |
| | நுவரெலியா | 06 |
| தென் மாகாணம் | காலி | 18 |
| | மாத்தறை | 02 |
| | ஹம்பாந்தோட்டை | 10 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 07 |
| | அம்பாறை | 09 |
| | திருகோணமலை | 02 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 13 |
| | புத்தளம் | - |
| வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் | 22 |
| | பொலனறுவை | 05 |
| ஊவா மாகாணம் | பதுளை | - |
| | மொனராகலை | 09 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 11 |
| | கேகாலை | 10 |
| வட மாகாணம் | மன்னார் | 04 |
| | முல்லைத்தீவு | 06 |
| | வவுனியா | - |
| | யாழ்ப்பாணம் | 04 |
| | கிளிநொச்சி | - |
| **மொத்தம்** | | **182** |

## முதியோர்களுக்கான அடையாள அட்டைகள் விநியோகம் - 2022

| மாகாணம் | மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் மாகாணம் | களுத்துறை | 3235 |
| | கொழும்பு | 8319 |
| | கம்பஹா | 4164 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | 1388 |
| | கண்டி | 2984 |
| | நுவரெலியா | 3227 |
| தென் மாகாணம் | காலி | 3250 |
| | மாத்தறை | 1357 |
| | ஹம்பாந்தோட்டை | 1046 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 889 |
| | அம்பாறை | 998 |
| | திருகோணமலை | 766 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 3111 |
| | புத்தளம் | 1575 |
| வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் | 1438 |
| | பொலன்னறுவை | 1233 |
| ஊவா மாகாணம் | பதுளை | 1277 |
| | மொனராகலை | 1143 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 3914 |
| | கேகாலை | 2728 |
| வட மாகாணம் | மன்னார் | 281 |
| | முல்லைத்தீவு | 225 |
| | வவுனியா | 334 |
| | யாழ்ப்பாணம் | 454 |
| | கிளிநொச்சி | 160 |
| மொத்தம் | | 49,496 |
| பிரதான காரியாலயத்தினூடாக நடமாடும் சேவையின் ஊடாக வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | | 586 |
| வழங்கப்பட்ட மொத்த அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | | **50,082** |

## முதியோர் ஆவரண கெபகரு நிகழ்ச்சித் திட்டம் (முதியோர் தாபரிப்புத் திட்டம்)

முதியோர்களுக்கான தேசிய சபையின் பிரேரணையின் பிரகாரம் உதவியற்ற மிகவும் வறிய நிலையிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உதவும் நோக்கில் இந்த முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித் திட்டம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு எந்தவொரு நபருக்கும் பணம் நன்கொடையாக வழங்க முடியும் என்பதுடன் அவ்வாறு நன்கொடையாளர் மூலம் வழங்கப்படுகின்ற பணம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மிகவும் வறிய நிலையிலுள்ள மற்றும் உதவியற்ற முதியோர்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 250/- தொகையோ, அல்லது மாதம் ஒன்றுக்கு ரூபா 500/- எனும் அடிப்படையில் நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படும்போது 04 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பயனாளிக்கு ரூபா 1,000/- தொகையோ ரூபா. 2,000/- எனும் அடிப்படையில் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதோடு, பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக பயனாளிக்கு பணம் வழங்குதல் இடம்பெறும்.

பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள எமது உத்தியோகத்தர்கள் (முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/சமூக சேவை உத்தியோகத்தர்) ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை பயனாளிகள் பற்றிய தகவல்களை ஆராயப்படுவதுடன் பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் போது பணம் வழங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்கொடையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

அவ்வாறு இந்த நிகழ்சித் திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் போது விருப்பமான ஒருவரை அல்லது சிலரை அல்லது தாம் விரும்பும் பிரதேசத்திலுள்ள ஒருவரை அல்லது சிலரை நன்கொடையாளர்களினால் தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறு இல்லையென்றால் அந்த தேர்வு இந்த அலுவலகத்தின் மூலம் செய்யப்படுவதுடன் பயனாளியின் பெயர், விலாசம், உள்ளடங்களான தகவல்கள் நன்கொடையாளருக்கு வழங்குவதற்கு எமது அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பங்களிப்பு வழங்க விரும்பும் நபர்கள் பத்தரமுல்லை, இலங்கை வங்கிக் கிளையில் இல. 228075 ஐ கொண்ட “முதியோர் நலன்புரி தொடர்பிலான தேசிய நிதியம்” கணக்கிற்கு உங்கள் நன்கொடைகளை வைப்பிலிட முடியும் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடும் பொழுது பணம் வைப்பிலிட்ட பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றை எமக்கு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் எமது அலுவலகத்திற்கு நேரில் வந்து உங்களின் பணத்தை நன்கொடையாக வழங்க முடியும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவியற்ற முதியோர்களுக்காக செய்யப்படும் மிகப்பெரும் தர்மமாகும். ஆகையினால் அதை மென்மேலும் விரிவுபடுத்தி முதியோர்கள் பலருக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் சேவைகளை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின்போது முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சியின் நன்கொடையாளர்கள், பயனாளிகள் மற்றும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இல | பங்களிப்பாளர்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. டப்லிவ்.எம்.வத்சலா | 01 | திருமதி. எம்.ஜி.வயலட் | தமுத்தேகம |
| 2. | கணக்கு | 01 | திருமதி.டப்ளிவ்.ஜி.குணவதி | குண்டசாலை |
| 3. | | 01 | திருமதி.பி. டி.ஜென் நோனா | ரிதிகம |
| 4. | | 01 | திருமதி.டி.எம்.டிங்கிரி அம்மா | மாஸ்பொத |
| 5. | | 01 | எம்.கே.ஏ.சோமா குணவர்த்தன | மினுவாங்கொட |
| 6. | | 01 | ஐ.என்சி நோனா | களனி |
| 7. | | 01 | எம்.நோபட் விமலரத்ன | கெஸ்பேவ |
| 8. | | 01 | திருமதி.ஈ.பியசீலி | கடுவல |
| 9. | | 03 | ஈ.ஏ.கேமபால பெரேரா | மஹரகம |
| 10. | | | திருமதி.லீலாவதி வீரசிங்ஹ | மஹரகம |
| 11. | | | எம்.ஏ.கேமலதா பெரேரா | மஹரகம |
| 12. | | 01 | எச்.எம்.ஹேரத் மெனிக்கே | இப்பாகமுவ |
| 13. | | 01 | ஜெ.பி.லெயிசா | வரகாபொல |
| 14. | | 01 | வர்னபுலிகே நன்ததாச | சீதாவாக்க |
| 15. | | 01 | திருமதி. பஸ்வென்னகே பிரதிலதா | சீதாவாக்க |
| 16. | | 01 | திரு. எச். குசும் பெரேரா | சீதாவாக்க |
| 17. | | 01 | திரு. ஈ.ஜி. டிங்கிரி பண்டா | தெல்கொட |
| 18. | | 01 | ஏ.ஜீ.தயாவதி | கோட்டை |
| மொத்தம் | | 18 | | |

## கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவு விபரங்கள் - 2022

| மாதம் | ஒதுக்கப்பட்ட அறைகளின் அளவு | வருமானம் ரூபா. | செலவுகள் | |
|---|---|---|---|---|
| | | | நீர்ப் பட்டியல் (கட்டணம்) ரூபா. | மின்சாரப் (கட்டணம்) பட்டியல் ரூபா. |
| ஜனவரி | | | 6,631.20 | 935.40 |
| பெப்ரவரி | | | 6,058.80 | 935.40 |
| மார்ச் | | | 10,992.96 | 2,454.30 |
| ஏப்ரல் | | | | |
| மே | | | | |
| யூன் | | | | |
| யூலை | | | | |
| ஆகஸ்ட் | | | | |
| செப்தெம்பர் | | | | |
| ஒக்டோபர் | | | | |
| நவம்பர் | | | | |
| டிசம்பர் | | | | |
| **மொத்தம்** | | | **23,682.96** | **4,325.01** |

2022 ஜனவரி,**பெப்**ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் **கதிர்கா**மம் சுற்றுலா விடுதியின் புனரமைப்பு பணிகள் காரணமாகவும், புதிய கதிர்காமம் முதியோர் இல்லத்தின் கட்டுமான பணிகள் ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் தொடங்கப்பட்டதாலும், தங்குமிட வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை **கதிர்காமம் முதியோர் இல்லத்தின் நிர்மானப்பணிகள்** ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினாலும் முதியோர்களுக்கான **தேசிய** சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த சுற்றுலா விடுதியில் மேற்கொள்ளப்படுகின்றது

## முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2000 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையானது நீதிமன்றச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தலைவர் உட்பட உறுப்பினர்கள் ஐந்து பேர்களைக் கொண்டு செயற்படுவதாகும். இதன் தற்போதைய தலைவர் ஓய்வூபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாவர்.

இதன் பணியாவது, பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத, 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிப பெற்றோர்களுக்கு அந்த கவனிக்காத பிள்ளைகளிடம் இருந்து வாழ்வதற்கு ஏதும் பராமரிப்பு பணம் பெற்றுக்கொடுப்பதாகும். அதன் பிரகாரம் இந்த பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத பெற்றோர்களால் பராமரிப்புச் சபைக்கு முறைப்பாடு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில், சபையினால் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினர்களையும் அழைத்து விசாரிக்கப்படுகிறது. பெற்றோர்களின் வருமானம் மற்றும் தங்கியிருப்பதற்கான தேவை போன்றன கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இங்கு பெற்றோர்களுக்கு பராமரிப்பு பணம் கோரப்படும் பொழுது தமது பிள்ளைகளிடத்திலும் தமது வளர்ப்பு பிள்ளைகளாக வளர்த்த பிள்ளைகளிடத்திலும் (Adoped Child) பராமரிப்பு பணம் கோர முடியும். மேலும் ஏதேனும் பெற்றோரின் வயது 60 க்கு குறைவாக இருக்கும் நிலையில் அவர்களின் அன்றாட பராமரிப்புக்களை செய்துகொள்ள முடியாத உடல் அங்கவீனமுற்றவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் 24 (I) ஆம் பிரிவின் கீழ் பராமரிப்பு பணம் கோர முடியும்.

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தேவையான விண்ணப்பம் பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தர்களிடமும் பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சபைக்கு குடும்ப பிணக்குகள், காணிப் பிணக்குகள் அல்லது சொத்து சம்பந்தமாக குடும்பங்களுக்கிடையிலுள்ள பிணக்குகள் போன்றவைகளை தீர்த்து வைக்கும் அதிகாரம் இந்தம் இச் சட்டத்தின் கீழ் இல்லை.

இந்த பராமரிப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பராமரிப்புப் பணம் செலுத்துதல் சம்பந்தமான உத்தரவு ஒன்றை எந்தப் பிள்ளையினாலும் செய்யாதிருக்கும்போது சட்டத்தின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு அந்த தீர்மானத்தை அமுற்படுத்துவதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு சாட்ட முடியும். அதன்போது நீதவானுக்கு அந்த உத்தரவை பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட கட்டளை ஒன்றை செயற்படுத்தும் விதத்தில் அமுற்படுத்தும் அதிகாரம் உண்டு.

## முதியோர்களுக்கான பராமரிப்பு சபை - 2022

**2022 ஆம் வருடத்தில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் - 92**

**சபையினால் தீர்த்து வைக்கப்பட்ட முறைப்பாடுகள் - 61**

**தற்சமயம் விசாரிக்கப்பட்டு வரும் முறைப்பாடுகள் - 31**

**நடாத்தப்பட்ட சபை அமர்வுகளின் எண்ணிக்கை - 43**

**செலவான தொகை ரூபா. - 1,425,500.00**

## முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை உறுப்பினர்கள்

- **திருமதி கீத்தா பொன்சேக்கா. - தவிசாளர்**
- **திரு. எம்.ஜீ. புஞ்சிபண்டா - செயலாளர்**

## சபையின் உறுப்பினர்கள்

1. **திரு. கே.பீ.ரணவீர**
2. **திரு. கேமலால் வீரசிங்ஹ**
3. **திரு.எல்.கே. அரியரத்ன**
4. **திரு.காஞ்சனா சில்வா**

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்
## 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலவர அறிக்கை

| | குறிப்பு | 2022 ரூபா. | 2021 ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| **நடப்பு அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து,தொழிற்சலை மற்றும் உபகரணங்கள்- WD WDV | 02 | 119,719,624.53 | 102,968,737.08 |
| வேலை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. கதிர்காமம் முதியோர் இல்லம் | 03 | 189,958,694.93 | - |
| | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| நிலையான சொத்துக்கள் | 04 | 2,952,533,614.97 | 2,483,498,750.16 |
| ஊழியர் சபைக் கடன் | 05 | 7,442,642.00 | 7,273,127.00 |
| ஊழியர் சபை முற்பணம் | 06 | 2,500.00 | 2,500.00 |
| கையிறுப்பிலுள்ளவை | 07 | 1,832,089.65 | 1,071,816.90 |
| ஏனைய வரவுகள் | 08 | 417,123,686.71 | 58,779,251.23 |
| பணமும் பணச் சமநிலைகளும் | 09 | 14,896,175.16 | 363,508,955.29 |
| **மொத்தத் நடைமுறைச் சொத்துக்கள்** | | **3,393,830,708.49** | **2,914,134,400.58** |
| | | | |
| மொத்த சொத்துக்கள் | | **3,703,509,027.95** | **3,017,103,137.66** |
| | | | |
| **உரித்து** | | | |
| அரசாங்கத்தின் பங்களிப்பு (மூலதனம்) | 10 | 24,177,724.85 | 31,320,644.40 |
| மூலதன மானியம் | 11 | 76,274,600.00 | 78,268,000.00 |
| மீள் மதிப்பீட்டு இருப்பு | 12 | 40,822,197.28 | 14,203,010.28 |
| திரண்ட மேலதிகம்/பற்றாக்குறை | 13 | (33,413,331.40) | (33,754,724.67) |
| மொத்த பொறுப்புக்கள் | | **107,861,190.73** | **90,036,930.01** |
| | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | | | |
| உழியர் பங்களிப்பு/ஊதியம் | 14 | 34,880,630.00 | 32,064,667.50 |
| முதியோர் பாதுகாப்பு நிதியம் | 15 | 3,557,523,896.48 | 2,888,661,598.14 |
| முதியோர் தாபரிப்பு நிதி | 16 | 4,984.35 | 12,984.35 |
| மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | **3,592,409,510.83** | **2,920,739,249.99** |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| திரண்ட செலவு | 17 | 375,934.48 | 644,861.33 |
| சாதாரண வைப்புகள் | 18 | 2,010,391.91 | 5,406,096.33 |
| ஒதுக்கீடுகள் மற்றும் இதர கொடுப்பனவுகள் | 19 | 852,000.00 | 276,000.00 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **3,238,326.39** | **6,326,957.66** |
| | | | |
| மொத்த உரித்து மற்றும் **பொறுப்புக்கள்** | | **3,703,509,027.95** | **3,017,103,137.66** |

இந்த நிதிநிலவர அறிக்கைகள் இலங்கையின் அரச பிரிவின் கணக்கியல் தர நிர்ணயத்தின்படி தயாரிக்கப்படுகின்றன.

30 முதல் 33 ஆம் பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் 34 முதல் 44 ஆம் பக்கங்களில் உள்ள குறிப்புகள் இந்த நிதி நிலவர அறிக்கைகளின் கட்டாய அங்கமாகும். இந்த நிதி நிலவர அறிக்கையைத் தயாரித்து வழங்குவது தொடர்பில் சபையின் உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

யமுன பெரேரா
செயலாளர்
மகளிர், சிறுவர்கள் அலுவல்கள் மற்றும்
செயலகம்
சமூக வலுப்பத்துனை அமைச்சு

கே.ஜீ.லெனரோல்
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசிய

தவிசாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்
### 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்தின் நிதி செயற்திறன் அறிக்கை

| | குறிப்பு | 2022<br>ரூபா. | 2021<br>ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| இலங்கை அரச வழங்கல்கள் | 20 | 158,360,000.00 | 166,900,000.00 |
| ஏனைய வருமானம் | 21 | 1,809,058.71 | 1,027,108.76 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | 22 | 11,136,319.55 | 9,585,870.82 |
| **மொத்த வருமானம்** | | **171,305,378.26** | **177,512,979.58** |
| | | | |
| **குறைக்கப்பட்ட : செலவுகள்** | | | |
| முதியோர் பயனாளிகள் நிகழ்ச்சிகள் | 23 | 20,474,498.91 | 15,568,541.82 |
| பணியாளர் செயலவுகள் | 24 | 104,715,699.36 | 120,449,831.41 |
| சொத்துக்கள், எந்திரிப் பொறிகள் மற்றும் பொருத்துதல்களைக் உபகரணங்கள் மீதான தேய்மானம் | 25 | 11,136,319.55 | 9,585,870.82 |
| பிரயாணச் செலவுகள் | 26 | 3,593,953.60 | 2,835,159.00 |
| வழங்கல்கள். | 27 | 1,977,796.00 | 2,746,597.17 |
| பராமரிப்புச் செலவுகள் | 28 | 5,235,956.38 | 3,292,493.42 |
**(உ) அறவிடப்பட வேண்டிய பணம்.**

இங்கு அறவிடப்பட வேண்டிய பெறுமானங்கள் குறிப்பிடப்பட்டிருப்பது ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதிகளுக்கே ஆகும். கடன் பெற்றோர் முன்னோக்கிச் செல்கின்ற அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். அறவிட முடியாக் கடன்கள் இனங்காணப்பட்ட ஆண்டிலேயே நீக்கப்படும்.

**(ஊ) பணம் மற்றும் பணத்துக்குச் சமனானவை**

நிதி நடைமுறை கூற்றின் நோக்கங்களுக்காக பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைக்கு உட்படுவது வங்கியில் உள்ள பணம், கையிறுப்புப் பணம் மற்றும் மூன்று மாதத்தை விட குறைந்த கால முதிர்ச்சியுடைய வங்கிகளில் வைப்புச் செய்துள்ள நிலையான வைப்புக்கள் என்பனவாகும்.

**(எ) கடப்பாடுகளும் நிதி ஒதுக்கீடுகளும்.**

வேண்டுதல்/ கோரல்களுக்கு அமைய செலுத்த வேண்டிய அல்லது நிதி நிலைமை கூற்றில் திகதியினால் வருடம் ஒன்றினுள் செலுத்தப்பட வேண்டிய கடன் அல்லது பொறுப்புகள் நிதி நிலைமை கூற்றில் நடமாடும் கடப்பாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. நிதி நிலைமைக் கூற்றில் திகதியினால் வருடம் ஒன்றுக்கு பின்னர் செலுத்தப்பட வேண்டிய

மீதியில் குறிப்பிடப்பட்டிருப்பது நிலையான (நடமாடாத) கடப்பாடாகவே ஆகும். தெரிந்துள்ள அனைத்துக் கடப்பாடுகளும் இந் நிதிக் கூற்றை தயாரிக்கும் போது கணக்குப் பதியப்பட்டு கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறு ஒன்றாக முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு சட்ட ரீதியாக அல்லது உடன்பாட்டு ரீதியான பிணைப்பு ஒன்று உள்ளபோது கடப்பாடுகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை இனங்கண்டு கொண்டுள்ளதுடன் கடப்பாட்டை செலுத்துவதற்காக பொருளாதார பிரதிபலன்கள் வெளியே மிதந்து செல்வது அவசியமாகின்றது.

**(ஏ) ஊழியர் பிரதிபலன்**

**பங்களிப்பு பணத் திட்டத்தை வரைவிலக்கணப்படுத்துதல்.**

பங்களிப்புப் பணத் திட்டத்தின் கடப்பாடுகள் வருமான் கூற்றில் செலவழிக்க வேண்டிய செலவுகளாக இனங்காணப்படும். தேசிய செயலகத்தின் அனைத்துப் பணிக் குழுவினர்களதும் ஊழியர் சேமலாப நிதி, மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியின் அங்கத்தவர்களாவதுடன் இந் நிதிக்காக தேசிய செயலகம் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்காக ஊழியர்களிடம் இருந்து அவர்களின் மொத்த சம்பளத்தில் 3% வீதம் ஆகுமாறு பங்களிப்பு வழங்குவர்.

(ஐ) வருமானங்களை இனங்காணல்.

i. இலங்கை அரசின் பங்களிப்பு

இலங்கை அரசின் பங்களிப்பை இனங்கண்டு இருப்பது, குவித்தல் முறையை அடிப்படையாகக் கொண்டே ஆகும். தேசிய செயலகத்தின் செலவுகளை குறை நிரப்புச் செய்வதன் அடிப்படையில் அவை மீண்டு வரும் பங்களிப்பு மற்றும் மூலதனப் பங்களிப்பு எனப் பிரிக்கப்பட்டுள்ளது

ii. வட்டி வருமானம்.

வட்டி வருமானக் கணக்குப் பதியப்படுவதும் பணக் குவிப்பு அடிப்படையிலேயே ஆகும்.

(ஒ) மூலதனச் செலவுகளை இனங்காணல்.

உடமையாக்கிக் கொள்வதற்காக செய்யும் செலவுகள், நிலையான தன்மையைக் கொண்ட சொத்துக்களை விரிவுபடுத்தல் அல்லது மேம்படுத்தல், சேவைகளைச் மேற்கொண்டு செல்வதற்காக ஆயினும் நிறுவனத்தின் உழைப்புக் கொள்ளலவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்டுகின்ற எல்லாச் செலவுகளும் மூலதனச் செலவுகளாகக் கருதப்படும்.

**02 இடம்பெற்றுவரும் வேலைகள்- கதிர்காமம் புதிய முதியோர் இல்லம்**

| | **2022** | **2021** |
|---|---|---|
| நிர்மாணத்திற்கான கொடுப்பனவு- GDP Engineering Pvt. Ltd | 173,855,241.23 | **-** |
| ஆலோசனைக் கொடுப்பனவு- மத்திய பொறியிலாளர் ஆலோசனை பணியகம் | 12,821,543.62 | - |
| திட்ட உடன்படிக்கை கட்டணம் – நகர அபிவிருத்தி அதிகார சபை | 154,786.04 | - |
| மின்சார இணைப்பு கட்டணம் - இலங்கை மின்சார சபை | 2,851,411.54 | - |
| கழிவுநீர் கட்டணம் - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை | 275,712.50 | **-** |
| **மொத்தம்** | **189,958,694.93** | **-** |

**03 நிலையான வைப்பு**

| வங்கி | **கணக்கு இலக்கம்** | **2022** | **2021** |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | 89202965 / 87638575 | 816,839,904.59 | 763,564,994.03 |
| இலங்கை வங்கி | 89251242 / 87695248 | 367,494,733.64 | 342,710,115.58 |
| இலங்கை வங்கி | 88906968 / 88067250 | 527,821,956.39 | 506,473,741.30 |
| இலங்கை வங்கி | 89438922 / 87389279 | 375,000,000.00 | 350,000,000.00 |
| மக்கள் வங்கி | 27835-0 | - | 57,572,045.42 |
| மக்கள் வங்கி | 33802-7 / 26953-8 | 88,740,995.03 | 81,844,315.24 |
| மக்கள் வங்கி | 32091-9 / 28999-0 | 84,951,865.56 | 81,693,094.45 |
| மக்கள் வங்கி | 35337-9 | 314,518,356.16 | - |

| | | | |
|---|---|---|---|
| மக்கள் வங்கி / தேசிய சேமிப்பு வங்கி | 33803-6 / 35786 | 178,760,601.72 | 164,893,039.47 |
| மக்கள் வங்கி / தேசிய சேமிப்பு வங்கி | 34302-0 / 37550 | 137,573,015.15 | 125,050,075.35 |
| தேசிய சேமிப்பு வங்கி | 03285 | 50,000,000.00 | - |
| **மொத்தம்** | | **2,941,701,428.24** | **2,473,801,420.84** |

**04 கிடைக்கவேண்டிய வட்டி**

| வங்கி | **கணக்கு இலக்கம்** | **2022** | **2021** |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | 89202965 / 87638575 | 100,146,810.22 | 20,480,277.51 |
| இலங்கை வங்கி | 89251242 / 87695248 | 44,023,855.42 | 8,469,165.04 |
| இலங்கை வங்கி | 88906968 / 88067250 | 85,384,239.49 | 6,604,972.63 |
| இலங்கை வங்கி | 89438922 / 87389279 | 35,784,246.58 | 14,960,821.92 |
| மக்கள் வங்கி | 27835-0 | - | 1,424,316.63 |
| மக்கள் வங்கி | 33802-7 / 26953-8 | 8,008,570.89 | 1,499,544.82 |
| மக்கள் வங்கி | 32091-9 / 28999-0 | 10,589,890.09 | 304,390.71 |
| மக்கள் வங்கி | 35337-9 | 29,995,572.54 | - |
| மக்கள் வங்கி / தேசிய சேமிப்பு வங்கி | 33803-6 / 35786 | 16,132,532.11 | 3,077,626.94 |
| மக்கள் வங்கி / தேசிய சேமிப்பு வங்கி | 34302-0 / 37550 | 9,426,578.38 | 1,922,002.53 |
| தேசிய சேமிப்பு வங்கி | 03285 | 4,646,575.34 | - |
| **மொத்தம்** | | **344,138,871.07** | **58,743,118.72** |

**05. பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவை**

| | **2022** | **2021** |
|---|---|---|
| **கணக்கு இலக்கம்** 228075 இல் பண இருப்பு | 8,536,099.05 | 355,846,655.39 |
| **மொத்தம்** | **8,536,099.05** | **355,846,655.39** |

**06. முதியோர் கொடுப்பனவிலிருந்து ரூபா. 100/= கழித்தல்**

| | **2022** | **2021** |
|---|---|---|
| மாவட்டம்/பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்டது. | | |
| 2016 | 427,704,100.00 | 427,704,100.00 |
| 2017 | 471,094,400.00 | 471,094,400.00 |
| 2018 | 485,467,300.00 | 485,467,300.00 |
| 2019 | 502,813,900.00 | 502,813,900.00 |
| 2020 | 477,200,000.00 | 477,200,000.00 |
| 2021 | 461,873,100.00 | 461,873,100.00 |
| 2022 | 473,513,300.00 | - |
| | **3,299,666,100.00** | **2,826,152,800.00** |
| கிடைக்கவேண்டிய மிகுதி - 2022 | 72,910,400.00 | - |
| **மொத்தம்** | **3,372,576,500.00** | **2,826,152,800.00** |

**07 திரட்டப்பட்ட அதிகரிப்பு/(பற்றாக்குறை)**

| | **2022** | **2021** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | **62,087,410.60** | **82,553,089.70** |
| வருடத்தில் ஈடு செய்தல் | 1,478,143.69 | 6,155,047.88 |
| வருடத்திற்கான மேலதிகம்/பற்றாக்குறை | 120,672,454.65 | (26,620,726.98) |
| இறுதி இருப்பு | **184,238,008.94** | **62,087,410.60** |

**08.முதியோர் தாபரிப்பு நிகழ்ச்சி (ஆவரண கெப்பக்கரு)**

| | **2022** | **2021** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | **12,984.35** | **26,984.35** |
| மொத்த வரவுகள் | 47,000.00 | 76,000.00 |
| | **59,984.35** | **102,984.35** |
| குறைபாடு:கொடுப்பனவு | (55,000.00) | (90,000.00) |
| இறுதி இருப்பு | **4,984.35** | **12,984.35** |

## 09. ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்.

| கணக்காய்வுக் கட்டணம் | 2022 | 2021 |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | **138,000.00** | **276,000.00** |
| குறைபாடு:கொடுப்பனவு | - | (414,000.00) |
| வருடத்திற்கான ஒதுக்கீடு | 288,000.00 | 276,000.00 |
| இறுதி இருப்பு | **426,000.00** | **138,000.00** |

## 10 .வட்டி வருமானம்

| நிலையான வைப்பின் வட்டி | 2022 | 2021 |
|---|---|---|
| வருடத்திற்குள் கிடைக்கப்பெறும் வட்டி | 181,460,147.31 | 113,759,083.05 |
| வருட இறுதியில் கிடைக்கப்பெறுவன | 344,138,871.07 | 58,743,118.72 |
| | **525,599,018.38** | **172,502,201.77** |
| வருட ஆரம்பத்தில் கிடைக்கப்பெறுவன | (58,743,118.72) | (42,845,519.86) |
| **மொத்தம்** | **466,855,899.66** | **129,656,681.91** |

11. **தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகள்**

நிதி நிலவர அறிக்கையின் திகதியில் தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகள் எதுவும் இல்லை.

12. **இடைவிடாத பொறுப்புகள்**

நிதி நிலை திகதியின் அறிக்கையில் எந்தவிதமான பொறுப்புகளும் இல்லை.

13. நிதி நிலவர அறிக்கையின் பின்னர் நிகழும் நிகழ்வுகள்

நிதி நிலவர திகதியின் அறிக்கைக்குப் பிறகு எந்த நிகழ்வுகளும் ஏற்படவில்லை, அவை நிதி அறிக்கைகளில் மாற்றங்கள் அல்லது வெளிப்பாடுகள் எந்த விதத்திலும் ஏற்படவில்லை

14. **ஒப்பீட்டு புள்ளி விபரங்கள்.**

முன்னிலைப்படுத்தும் நோக்கத்திற்காக தேவையான இடங்களில் ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளன.

15. **சபை உறுப்பினர்களின் பொறுப்புக்கள்**

இலங்கை அரச பிரிவின் கணக்கியல் தர நிர்ணயத்திற்கமைவாக (SLPSAS) இந்த நிதி நிலவர அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியது சபை உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல- எல்எஸ்டபிள்யூ/டீஎன்எஸ்.ரீ/2022 2023 ஜூன் 23 ஆம் திகதி

தவிசாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 ஆம் வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிய இறுதி ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மற்றும் சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடு தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தையுடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளரின் அறிக்கை

**1.** நிதிக்கூற்று விபரம்

**1.1** புள்ளி விபரக்கூற்று

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 ஆம் டிசம்பர் 31 ஆம் திகதிய நிதிக்கூற்று வெளியீடு, குறித்த தினத்தன்று இறுதி ஆண்டிற்கான விரிவான வருமான வெளியீடானது உரித்து மாற்றக்கூடிய வெளியீடு, குறித்த தினத்தின் இறுதி ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதி கூற்றுகளுக்கு உரித்தான குறிப்புகள். சாராம்சமாக காணக்கூடிய தேவையான கணக்கில் சார் கொள்கைகள் உள்ளடங்கிய வகையில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிய இறுதி ஆண்டிற்கான நிதிக்கூற்று வெளியீடானது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு யாப்பில் 154 (1) சட்டத் திருத்தத்தினோடு வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய சட்ட திட்டங்களுக்கேற்ப எனது கட்டளையின் பிரகாரம் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. அரசியலமைப்பு சட்டத்தின் 154 (6) ஆம் யாப்பின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

எனது அநிக்கையில் புள்ளி விபரப்படுத்தப்பட்ட நிலைப்பாடு தொடர்பில் குறித்த பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள காரணிகளில் காணப்படும் பாதிப்புகள் தவிர்ந்த, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதிக் கூற்றினுள் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமை மற்றும் குறித்த தினத்தில் இறுதி ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் நிதிப்பாய்ச்சல் இலங்கை அரச பிரிவின் கணக்கியல்சார் தரநிர்ணயத்திற்கேற்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமையின் பிரதிபலிப்புச் செய்யும் வகையில் காணப்படுகின்றது என்பது எனது நிலைப்பாடாகும்.

1.2 தற்போதைய நிலைப்பாடு/கருத்துக்கள் குறித்த அடிப்படை

(அ) இலங்கையின் பொதுத்துறை கணக்கியல் தர நிர்ணயத்திற்கு ஏற்ப 01 இன் விதிகளுக்கு மாறாக, முதியோர் சமூப் பாதுகாப்பு நிதியத்திற்கான நிதியின் வரவுக்கான பங்களிப்பு தொகை பண அடிப்படையில் கணக்கிடப்பட்டது. இதன்காரணமாக, நதி நிறுவப்பட்ட 2016 ஆம் ஆண்டு முதல் 20211 ஆம் வருடம் பரிசீலனைக்குற்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 75,431,300 நிலுவையிலுள்ள தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

(ஆ) 228075 ஆம் இலக்கத்தையுடைய சமூக பாதுகாப்பு நிதியின் நடமாடும் கணக்கின் நிதிப் புத்தகத்தில் பிழையானதாக ரூபா 163.214 நிதியானது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருக்கவில்லை அல்லது பணப் பற்றாக்குறை தொடர்பாக 30 மாதங்கள் காலாவதியாகிவிட்டது. இருந்தும் இதற்கான எந்தவித தீர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு தர நிர்ணயத்தின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த கணக்காய்வு தரநிர்ணயத்தின் கீழ் காணப்படக்கூடிய எனது பொறுப்புகள் இவ்வறிக்ைகயின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்ளைரின் கடமைகள் என்ற வகையில் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது நிலைப்பாடானது காணப்படக்கூடிய இந் நிலைப்பாட்டிற்கான அடிப்படையாக கருத்திற்கொள்ளும் வகையில் , என் மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சி போதுமானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் காணப்படும் ஏனைய தகவல்கள்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்பு எனக்கு வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் தேசிய செயலகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் உள்ளடக்கியுள்ளது. என்றபோதிலும் நிதிக்கூற்று மற்றும் அது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதாகவும் அர்த்தப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்தும் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக்கூற்று தொடர்பில் எனது நிலைப்பாட்டின் ஏனைய தகவல்கள் உள்ளடங்காததோடு நான் இது தொடர்பில் எந்தவொரு வகையிலும் சான்றிதழ்ப்படுத்துவதோ அல்லது நிலைப்பாட்டை முன்வைப்பதோ அர்த்தப்படாது.

நிதி நிலவரம் தொடர்பாக எனது கணக்காய்வின் பிரகாரம் மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய விவரங்கள் பெறப்படுகின்றபோது ஏனைய தகவல்கள் நிதி நிலவர அறிக்கையுடன் அல்லது கணக்காய்வினுடனோ அல்லது ஏனைய முறைகளோடு பெறப்பட்டு எனது அறிவோடு பொருந்துகிறதோ என்பகை் கருத்தில் கொள்வதுதான் எனது பொறுப்பாகும்.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கையினைப் படிக்கும்போது, தவறான அறிக்கைகள் இருப்பதாக நான் முடிவு செய்தால் அந்த உண்மைகளை நிர்வகிக்கும் பங்குதாரர்களுக்கு தெரிவித்து திருத்தம் செய்ய வேண்டும். மேலும் திருத்தப்படாத தவறான விளக்கங்கள் இருந்தால் அவற்றினை அரசாங்க கணக்கியல் சுற்றுநிரூபம் 154 (6) பிரகாரம் என்னால் உரிய காலத்தில் பாராளுமன்ற அறிக்கைகளில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

1.4 நிதிக்கூற்று தொடர்பில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் பரிபாலனம் செய்யும் பிரிவினரது கடமைகள்.

குறித்த நிதி கூற்றானது இலங்கை அரசு பிரிவின் கணக்கில் தர நிர்ணயத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்துதல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி அல்லது பிழையான முறையில் ஏற்படக்கூடிய பெருமான ரீதியான அசத்தியக் கூற்றுக்கள் என்பதை அன்றி நிதிக்கூற்று ஒழுங்குபடுத்துவதற்காக இயலுமான வகையில் தேவையான உள்ள நிர்வாக ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல் என்பன முகாமைத்துவ செயற்பாட்டை முன்னெடுப்போரின் கடமையாகும்.

நிதிக்கூற்றினை ஒழுங்குபடுத்தும் சந்தர்ப்பத்தில் தேசிய செயலகத்தினை முறையாக நடாத்திச் செல்வதன் இயலுமைகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தினரின் பொறுப்பாகக் காணப்படுவதோடு, முகாமைத்துவம் செய்தல் தேசிய சபையை கலைக்க முடிவு செய்யும் பட்சத்தில் அல்லது வேறு மாற்றுவழி காணப்படாதபோது நடாத்திச் செல்லல் தொடர்பில் அடிப்படையில் கணக்கினை வைத்திருத்தல் மற்றும் தேசிய செயலகத்தினை முறையான நிலைப்பேற்றிற்கு உரிய காரணிகள் தொடர்பில் கண்டறிதல் என்பன நிர்வாகத்தின் கடமையாகும்.

தேசிய செயலகத்தின் நிதி தொடர்பான அறிக்கையிடல் செயல்பாடு தொடர்பில் பரிசோதித்தல் கடமை, நிர்வகிக்கும் பிரிவினரின் ஊடாக நடைபெறக்கூடிய ஒன்றாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு யாப்பின் 16 (1) உப சட்டப் பிரிவின் பிரகாரம் தேசிய செயலகத்தின் வருடாந்த மற்றும் குறித்த நேரம்சார் நிதிக்கூற்றினை ஒழுங்குபடுத்துவது இயலுமான வகையில் சுயாதீன வருமானம், செலு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய வகையில் சுயாதீன வருமானம், செலவு, சொத்துக்கள் தொடர்பில் உரிய வகையில் பதிவு ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் முறையாக பேண்ப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்கு தொடர்பிலான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வின் பொறுப்புகள்.

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றானது, மோசடி மற்றும் பிழை காரணமாக ஏற்படக்கூடிய அளவீடு சார்ந்த அசத்திய கூற்றுகள் அன்றியது என்பதாக நியாயமான உறுதிப்படுத்தலினை வழங்குதல்.

மற்றும் எனது நிலைப்பாட்டினை கொண்ட கணக்காய் அறிக்கை வெளியிடல் என்பன எனது நோக்கமாகும் நியாயத்தினை நிலை நாட்டுதல் உயர் மட்டத்தில் உறுதிப்படுத்துவதாக அமையும் என்பதோடு, இலங்கை கணக்காய்வு தர நிர்ணய அடிப்படையில் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எல்லா சந்தர்ப்பங்களிலும் போதுமான அளவில் தவறான அறிக்கைகளை கண்டறிதல் என்பதாக உறுதிப்படுத்துவதாக அமையாது. மோசடி மற்றும் தனியாக அல்லது குழுவாக தவறிழைப்பதற்கான சாத்தியப்பாடுகளின் காரணமாக போதுமான அளவிலான பிழையான அறிக்கைகள் ஏற்பட முடியும் என்பதோடு, அதில் போதுமான அளவு குறித்த நிதிக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்களின் மூலமாக எடுக்கக்கூடிய பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் அடிப்படையினை சார்ந்துள்ளது

**இலங்கை கணக்காய்வு தர நிர்ணயத்தின் அடிப்படையில் கணக்காய்வின் பிரிவாக என்னால் காணக்காய்வின்போது தொழில் சார்ந்த தீர்மானங்கள் மற்றும் தொழில் சார் ஐயப்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்னால் மென்மேலும்**

- வெளியிடப்பட்ட கணக்காய் நிலைப்பாட்டிற்கான அடிப்படையினை இலக்காகக் கொள்ளும்போது மோசடி மற்றும் பிழைகள் காரணமாக நிதி கூற்றில் ஏற்படக்கூடிய அளவீடுசார் பிழையான கூற்றுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்த தொடர்பான சந்தர்ப்பத்திற்கேற்ற உரிய கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையான கண்ணோட்டத்தின் காரணமாக ஏற்படக்கூடிய அளவீடுகள் சார்ந்த பிழையான கூற்றுக்கள் ஏற்படக்கூடிய பாதிப்புகளைவிட மோசடியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் அதிகரிக்கக் காரணம், அவை கூட்டணியாக போலியான ஆவணங்களை தயாரித்தல் ஊடாக கூலிகள் வழங்கப்பட்ட ரீதியான தவிரத்தல்கள, பிழையாக காண்பித்தல் அல்லது உள்ளக நிர்வாக பொடுபோக்கின் காரணமாகவும் ஏற்படலாம்.

- உள்ளக நிர்வாகத்தில் உற்பத்தித்திறன் தொடர்பில் நிலைப்பாட்டினை முன்வைக்கும் நோக்கில் காணப்படாத போதிலும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப உரிய கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடுவதற்காக வேண்டி உள்ளக நிர்வாகம் தொடர்பில் விழிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- உபயோகிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் தொடர்புகள் குறித்து வெளியிடுதல் பாராட்டத்தக்கது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தேசிய செயலகத்தின் நிலையான இருப்பு தொடர்பில் போதுமான அளிவிலான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா? என்பன தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சார்ந்த அத்தாட்சிகளின் அடிப்படையில் கணக்கியல் சார்ந்த நிறுவனத்தின் நிலையான இருப்பு தொடர்பில் அடிப்படைகளை உபயோகிப்பதன் ஊடாக தொடர்புகள் தீர்மானிக்கப்படும். போதுமான நிச்சயமற்ற தன்மை காணப்படுமிடத்து என்னால் தீர்மானத்திற்கு வரமுடியும் எனில் நிதிக் கூற்றுகளில் அது தொர்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கை தொடர்பான அவதானத்தை செலுத்துவதோடு, குறித்த வெளிப்படுத்தல் போதுமான வகையில் காணப்படாதுவிடின் எனது நிலைப்பாட்டை மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் நிலைமைகள் அடிப்படையில் தொடராக நடாத்திச் செல்லுதல் முடிவடையவும் வாய்ப்புள்ளது.

- நதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கும் அடிப்படையிலான கொடுக்கல், வாங்கல் மற்றும் நிகழ்வுகள் முறையான மற்றும் நியாயமான முறையில் உள்ளடங்கியிருக்கக்கூடிய வகையில் மற்றும் வெளியிடுதல்

உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளில் அனைத்தையும் முன்வைத்தல் பாராட்டுக்குரியதாகும்.

எனது கணக்காய்வின் ஊடாக அடையாளங் காணப்பட்ட தேவையான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வாக ரீதியிலான பலவீனங்கள் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் நிர்வாகிக்கும் பிரிவினருக்கு விழிப்புணர்வு செய்துள்ளேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும்ஒழுங்குமுறை தேவைகள் தொடர்பான அறிக்கை.

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட நிதி ஒதிக்கீடு உள்ளடங்குகிறது.

2.1.1. எனது அறிக்கையின் தரத்தின் கணக்கிடப்பட்ட கருத்துக்கான அடிப்படைப் பிரிவில் விவரித்த உண்மைகளிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்கான 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு யாப்பின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கேற்ப, 12 (அ) குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வின் கீழால், கணக்காய்வு தொடர்பாக தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விவரித்தல் என்னால் பெற்றுக்கொள்ளப்படுவதோடு, எனது ஆய்வின் பிரகாரம் உரிய நிதி அறிக்கையானது முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக நடாத்திச் செல்லப்பட்டுள்ளது.

2.1.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் யாப்புச் சட்டம் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தேவைக்கேற்ப தேசிய சபையின் நிதிக்கூற்றானது கடந்த ஆண்டோடு ஒத்துப்போகிறது.

2.1.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் ஆண்டிற்காக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாட்டிற்கேற்ப நிறுவனத்தின் என் மூலமாக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையில் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்படும் செயற்திட்டங்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்படும் சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் போதுமான அளவிலான காரணிகளை வரையறை செய்வதனூடாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெளியீடு செய்யும் அளவில் எந்தவொன்றும் அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தையுடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கேற்ப நிறுவனத்தின் நிர்வாகக் குழுவினது ஏதேனுமொரு உறுப்பினர் ஒருவருக்கு நிறுவனம் தொடர்பாகி ஏதேனுமொறு உடன்படிக்கை ஒன்று தொடர்பாக நேரடியாக வேறொரு வழியூடாக சாதாரண வணிக நிலைமையிலிருந்து பிரத்தியேகமான தொடர்பொன்று காணப்படுகிறது என.

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கேற்ப ஏதேனும் தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர்கள் (நிர்வாகம் குழுவினர்

மூலமாக வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைகளின் இணக்கத்தின் பிரகாரம் செயற்படவில்லை எனும் அடிப்படையில்

| **விதிகள்/உத்தரவு பற்றிய குறிப்பு** | அவதானிப்புகள் |
|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு | மீளாய்வுக்குறிபட்ட வருடத்தின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிறைவேற்று அறிக்கையினை தயாரித்து நிதிநிலவர அறிக்கையினைத் தயாரித்து நிதிநிலவர அறிக்கையுடன் கணக்காய்வாய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தினைக்கொண்ட கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அவதானிப்புக்களும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் அதிகாரம், கடமைகள் மற்றும் பணிகள் விதிமுறைகளுக்கமையாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

(அ) மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் திறைசேரி நிதியத்தின் ஒதுக்கீடுகளைப்பயன்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த திருத்தப்பட்ட செயற்திட்டத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்ட 16 இற்கு ரூபா. 26.84 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

(I) மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் திரைசேரி நிதியத்தின் கீழ் முதியோர்களின் நலன்புரி தொடர்பான நிகழ்ச்சிகளுக்காக ரூபா 50 மில்லியன் நிதியில் ரூபா 20.525 மில்லியன் நீதி முதியோர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரி தொடர்பிலான நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தப்படாது நிறுவன செலவலுக்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(II) திரைசேரியின் நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்குள் முதியோர்களின் நலன்புரி தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு திருத்தப்பட்ட செயற்திட்டத்திற்கு உள்ளடக்கி செயற்பாடுகளுக்கு இடையே பிரதான செயற்பாடு 03 இன் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) நிதியத்தின் திட்ட செயற்பாடுகள் மீண்டும் திருத்தப்பட்டு அவ்வப்போது திருத்தப்பட்டிருந்த திட்டம் செயற்பாடுகள் காணப்பட்டால் அதனை அடையாளங்கண்டு 2022 செலவு மதிப்பீடு தயாரிக்கும்போது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் வருட இறுதியாகும்போது சில தினங்களுக்கு முன்னதாக திருத்துவது பொருத்தமானதல்ல என அவதானிக்கப்பட்டுள்ளது. இருந்தும் 2022 ஆம் வருடம் செயற்பட்டத்திற்கு

ஏற்ப இலக்கு வைக்கப்பட்ட முன்னேற்றங்களை பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போனதுள்ள செயற் திட்டத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

2.2.4 2018 ஆம்ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கண்காய்வு யாப்பின் 12 (ஊ) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின்போது கீழ் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களில் தேசிய செயலகத்தின் வளப் பயன்பாடுகளில் திறமையான மற்றும் உண்மையான மற்றும் கால எல்லைக்குள் தொடர்புடைய ஒழுங்கு விதிகளுக்கு பொருந்தக்கூடிய பிரயோகபூர்வ பயன்பாட்டிற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமை.

(அ) குறைந்த வருமானமுடைய முதியோர் சமுதாயத்தினரின் விசேட மற்றும் அவசர சந்தர்ப்பங்களின்போது சுகாதாரம், போசாக்கு மற்றும் பாதுகாப்பு செலவு செய்தல் மற்றும் முதியோர்களின் நலன்புரி நோக்கத்திற்கான முதியோர் கொடுப்பனவு பெறும் பயனாளிகளில் ஒரு பயனாளிகளிடமிருந்து மாதாந்தம் ரூபா 100 எனம் அடிப்படையில் முதியோர் கொடுப்பவிலிருந்து

கழித்து முதியோர் சமூக பாதுகாப்பு நிலையத்தின் ஸ்தாபித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக் கொண்டு அரசு வர்த்தமானியில் பிரசுரித்துது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நீதி விதிமுறைகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(I) முதியோர் சமூக பாதுகாப்பு நிதியினை ஆரம்பித்துச் செல்லல் மற்றும் நடைமுறைப்படுத்திச் செல்லல் தொடர்பில் கிடைக்கப்பெறும் முதியோர் கொடுப்பனவில் 2016 ஜனவரி மாதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்குரிய ரூபா 2,902,192.100 கிடைக்கப்பெற்றருந்த கழிக்கப்பட்டிருந்த ரூபா. 2,826,192,800 மார்த்திரமே மிகுதி தொகையான ரூபா 75,999,300 நிதியானது கழித்துக் கொள்வதற்கான எந்தவித படிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(II) முதியோர் சமூக பாதுகாப்பு நிதியில் சேகரிக்கும் நிதி முதியோர்களின் நலன் உரிமைகளை மேம்படுத்தல், முதியோர்களை வலுவூட்டுதல் பாதுகாத்தல் போன்ற விடயங்களுக்காக நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்காக 2017 ஆம் வருடத்திலிருந்து மீளாய்வு செய்யப்பட்ட வருடம் வரையான 06 வருட காலத்திற்குள் நிதியத்திற்கு நிதி திரட்டப்பட்ட ரூபாய் 444.48 மில்லியன் இலிருந்து ரூபா 546.42 மில்லியன் நிதி எடுக்கப்பட்டாலும் அந்த காலத்திற்குள் செலவழிக்காமல் பிடித்து வைக்கப்பட்ட நிதியாக ரூபா. 448.48 மில்லியன் இருந்து ரூபாய் 202 மில்லியன் வரையான நிதியளவு காணப்பட்டது.

(III) 2018 - 2022 வரையான 5 வருட காலத்திற்குள் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பு நிதியில் முதியோர்களின் பயன்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தாமல் ரூபா 1,476.15 மில்லியிலிருந்து ரூபாய் 2,941.70 மில்லியன் போன்ற நிதி நிலையான வைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன்படி பல வருடங்கள் பூராகவும் முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் நியதிகளுக்கு ஏற்ப நிதி விடயங்கள் போன்றவற்றுக்கு மேற்கொள்ளாமல் நிலையான வைப்பாக பயன்படுத்தாமலிருந்தது.

(ஆ) கடந்த 7 வுருடங்களிற்குள் வழங்கப்பட்டிருந்த அரச பிரதான நிதியானது பயன்படுத்தாது நிதியானது வங்கியின் நடமாடும் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. மேலாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31-ஆம் திகதி பயன்படுத்தப்படாத ரூபா 6,137,005 பெறுமதியான கடந்த ஏழு வருட காலத்திற்குள் ரூபா 3,201,322 இலிருந்து ரூபா. 15,001,302 வரை பிடித்து வைக்கப்பட்ட நிதி தலைப்பிற்கு செலவழிக்காமல் வங்கி நடமாடும் கணக்கில் வைக்கப்பட்டு காணப்பட்டது 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 19 ஆம் பிரிவின் விதிமுறைகளின் படி தேவைக்கு அதிகமான பணம் தேசிய பேரவையின் மூலம் எடுக்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் பயன்படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் பேரவையின் கடமையான முதியோர்களின்

சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்குபற்றல் அபிமானம் உள்ளடங்களாக உறுதிப்படுத்துதல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் திட்டங்கள் தேசிய மட்டத்தில் வெளிப்படையாக மற்றும் முறைப்படி சமத்துவ நன்மைகளுக்காக வழங்குவதற்கு வசதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக முதியோர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட அடிப்படையில் விரிவாக்கி வயது அமைப்பு, சுகாதார நிலைமை, பொருளாதார நிலைமைகள் அடையாளம்கண்டு மற்றும் ஒழுங்குமுறையான சரியான பயன்பாடுடைய தீர்மானங்களை பெறுவதற்காக முதியோர் சமுதாயத்தினரின் தகவல்களை உள்ளடக்கி சரியான தரவுத்தளத்தினை பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதன் மூலம் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பராமரித்தல், ஆத்ம திருப்த்தி அபிமானம் சுய-கௌரவத்தினை பாதுகாத்தல் போன்றன பிரதான பணியாக நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பில் பரிசீலனை மற்றும் பின்னூட்டம் செய்தலின்போது உரிய செயற்பாட்டிற்கு ஏற்பத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதனை விடுத்து மற்றும் செயல்பாட்டின் மீது போதுமான கவனம் செலுத்தப்படவில்லை

(உ) முதியோர்களுக்கான தேசிய கொள்கையை தயாரிப்பு செய்தல் தொடர்பில் 2016 ஆம் வருடம் அரசின் வருடாந்த செலவு மதிப்பீட்டின் ஒதுக்கீடுகளில் ரூபா. 4,245,807 இல் 2,438,715 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இதுவரையில் தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மிகுதி ரூபா 1,807,092 நிதி பொதுவைப்புக் கணக்கில் 06 வருட காலமாக அவ்வாறு பிடித்து வைக்கப்பட்டுள்ளது.

(ஊ) மகளிர், சிறுவர் அலுவலகல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமான ஜீப் வாகனம் அந்த அமைச்சின் செயற்பாட்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புனருத்தாபன/புதுப்பித்தலுக்காக செயலகத்தினால் முறைசாராத முறையில் ரூபா 1,585,521 செலவு செய்யப்பட்டாலும் வாகனம் ஓட்டுவதற்கு ஏற்ப செலவழித்த புதுப்பித்தல் செலவினை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படிருக்கவில்லை, ஜீப் வாகணத்தை மீண்டும் கைப்பற்றுவதில் செயலாகத்திற்கு ரூபா. 1,585,521 நாட்டம் ஏற்பட்டுள்ளது. 03 வருடங்கள் அளவான காலங்கள் காலபதியாக இருந்தும் செயலகத்தின் மூலம் செலவு செய்யப்பட்ட தொகையினை ஈடு செய்ய முடியாமல் போனது.

(I) 70 வயதினை பூர்த்தியான குறைந்த வருமானமுடைய முதியோர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் ரூபா 2,000/- கொடுப்பனவு செய்வதில் கொடுப்பனவுப் பயனாளிகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்களான அறிக்கை முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படத் தவறிய அதேவேளை கொடுப்பனவுப் பயனாளிகளின் எண்ணிக்கை செலுத்தும் கொடுப்பனவின் பெறுமதி மற்றும் மாதத்திற்குள் கொடுப்பனவு செலுத்தாமல் பயனாளிகள் தொடர்பான விபரங்கள், தரவுத் தளத்தில் பேணி நடைமுறைப்படுத்துவதில் முதியோர்களுக்கான தேசிய செயலகம் நடவடிக்கை மேற்கொள் மேற்கொண்டு இருக்கவில்லை

(ii) தரவு அமைப்பு இல்லாமையால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூபா. 2,000 கொடுப்பனவு செலுத்துவது தொடர்பாக மாவட்ட செயலகத்தின் விபர அறிக்கையுடன் பிரதேச செயலகத்தின் விபர அறிக்கைகள்

வேறுபாடுகள் காணப்படுவதன் காரணமாக மாவட்ட செயலகத்தின் கணக்காளர் மூலம் அனுப்பி வைக்கப்படும் அறிக்கேனை சான்றிதழ்ப் படுத்தி உறுதிப்படுத்தி எதிர்பார்க்கப்பட்டிருப்பதில் அவதானித்தல் வேண்டும்

**2.3 ஏனைய விடயங்கள்**

சிரேஷ்ட நிலை ஊழியர் சபையில் உதவி பணிப்பாளர்,(அபிவிருத்தி) உதவி பணிப்பாளர் (நிர்வாகம்), சட்ட உத்தியோகத்தர், உதவிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்) போன்ற பிரதான பதவிகளுக்கு நீண்ட காலமாக பதவி வெற்றிடம் காணப்படும் அதேவேளை கணக்காளர் பதவியானது பதில்கடமை அடிப்படையில் பதவி நியமிப்பு செய்யப்பட்டிருக்கின்றது

**டபிள்யூ.பீ.சீ. விக்ரமாரத்ன**
**கணக்காய்வாளர் நாயகம்**

**முதியோர்களுக்கான தேசிய பேரவையின் 2022 டிசம்பர் 31 ஆம் தேதி இறுதி ஆண்டுக்கான நிதிக்கூற்று மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பிலான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தினை உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு நாயகம் அவர்களின் அறிக்கையின் உள்ளடங்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பில் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள்**

**1.2 கணக்காய்வால் நாயகத்தின் கருத்துக்கான அடிப்படை**

(அ) முன்னைய வருடங்களின் அடிப்படையில் சமூக பாதுகாப்பு பங்களிப்புக்கள் பண அடிப்படையில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தாலும் 2022 வருட நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அது திரண்ட நிதி அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டிற்கான பங்களிப்புகள் வருமானம் மற்றும் பெறத்தக்க தொகை தற்போதைய சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) அப்போது வங்கி ஏற்பாடுகள் மற்றும் தொடர்பான கடமைகளைச் செய்த உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் இல்லாததாலும், உரிய ஆவணங்கள் கிடைக்காததாலும் இது தொடர்பாகப் போதுமான தகவல்கள் கிடைக்காதால் தீர்த்து வைத்தல் தாமதமானது. இருப்பினும் இதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**2.2.2**

2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் வரைவு 19.06.2023 ஆம் திகதியிடப்பட்ட NSE/DEV/13/04 என்ற எண்ணைக் கொண்ட கடிதம் மூலம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளமையினை அறியத் தருகின்றேன். எதிர்வரும் வருடங்களில் இது போன்ற காலதாமத்தை தவிர்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.2.3**

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் பொதுச் செலவினங்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிடப்பட்ட சில முதியோர் நிலம் வரை திட்டங்களை செயல்படுத்தும் திறன் குறைவாக இருந்தது. மேலும் எரிபொருள், குடிநீர், தொலைபேசி, தபால், மின்சாரம் போன்ற அத்தியாவசிய செலவுகள் அதிகரித்துள்ளதால், வருடாந்த வரவு - செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி முதியோர்களுக்கான தேசிய செயலகத்தை நடாத்திச் செல்வதற்கு போதுமானதாக இல்லை. இதன் காரணமாக, முதியோர் நலன்புரித் திட்டங்களின் நிதி ஒதுக்கீடுகள் நிர்ணயிக்கப்பட்ட முறையின்படி நிறுவனத்தின் செலவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ii) நிதி அமைச்சின் மூலமான எனது எண் BD/CBP/01/01/04-2022 மற்றும் 26.04.2022 ஆம் திகதி வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை எண் 3/2022 இன் பிரகாரம் அரச செலவினங்களைக் கட்டுப்படுவதற்காக அரச கருவூலத் திணைக்களத்தினால் நிதி வெளியிடுவதற்கான திட்டங்களை செயல்படுத்த முடியாமல் போனதாலும், முதியோர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான ஆண்டு முழுவதும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததாலும், திட்டங்களின் முன்னேற்ற மிகவும் குறைவாகவே இருந்தது.

(ஆ) 2022 ஆம் ஆண்டின் முதல் 03 காலாண்டுகளில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, BD/CBP/01/05/04 என்ற இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கைகளின்படி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் - 26.04.2022 அன்று நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட 2022 திட்டங்கள் அவ்வாறு செய்ய நிறுத்தப்பட்டன. பின்னர், ஆண்டு இறுதியில் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், திட்டங்களின் தேவைகளின் அடிப்படையில் செயல் திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

2.2.4

(அ) 2000 ஆண்டின் 09 ஆம் இலக்கத்தை கொண்ட முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 19 பிரிவின் முதலாவது துணை பிரிவின் பிரகாரம் இந்த நிதி நிறுவப்பட்டுள்ளது. அதன்படி முதியோர்கள் சமூக பாதுகாப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான அடித்தளமான 2000 ஆம் ஆண்டின் ஒன்பதாம் இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டத்தை பாராளுமன்றம் சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டதன் மூலம் இந்த நிதியின் செல்லுபடி தன்மை சட்டபூர்வமான தன்மை மற்றும் வெளிப்படுதன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உங்களின் அவதானிப்புக்களின் படி ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் இருந்த நிதிக்கு அனுமதி வழங்காவிட்டாலும் இந்த நதியத்தை நிறுவுவதற்கு அடிப்படையான 2000 ஆண்டு 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் மேலே குறிப்பிட்டுள்ளதன் படி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

(i) மாதாந்தம் 70 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கு வழங்கப்படும் உதவித்தொகை அடிப்படையில் பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களிலிருந்து அளிக்கப்படும் உரிய கொடுப்பவுப் பணம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்தப் பணம் முறையாக வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் இருந்தும் மாதாந்தம் கழிக்கப்படும் பணம் முறையாக வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இருந்தும் மாதாந்தம் கழிக்கப்படும் பணம் அனுப்பாத மற்றும் கொடுப்பனவுகளை தாமதப்படுத்தும் அலுவலகங்களுக்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு தொடர்பில் 02 பிரதேச செயலகங்களைத் தவிர மிதீ பணம் சகலும் மீளப் பெறப்பட்டுள்ளது.

(ii) சமூக பாதுகாப்பு நிறையத்தின் முதல் செயல்திட்டம் 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதால், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அந்த நிதி தொடர்பான முதியோர் நலன்புரித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டவில்லை. மேலும் 2020 மட்டும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக மற்றும் 2020 ஆம் வருடம் நாட்டில் இடம்பெற்ற

பொருளாதார சிக்கல்கள் காரணமாக திறைசேரியின் செயலாளரால் வெ ளியிடப்பட்ட 03/2022 சுற்று நிருபத்தின்படி நிகழ்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால் தற்காலிகமாக சமூக பாதுகாப்பு நிதியின் திட்டங்கள் 26.04.2022 ஆம் திகதிக்குப் பிறகு மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இந்த திட்டங்களை செயல்படுத்த தேசிய பேரவையின் மூலமாக அங்கீகாரம் பெற்று பெறப்பட்டது. தேசிய பேரவையின் மூலம் இடைக்காலத்தில் நிகழ்ச்சிகளை நிறுத்துவது எதிர்பார்த்த பலன் கிடைக்காததற்கு ஒரு காரணமாக அமைந்தது.

(iii) 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் பகுதி IV இன் நியின் கீழ் இலக்கம் 21 இன் பிரகாரம் தேசிய பேரவைக்குச் சொந்தமான நிதி தேசிய பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட முறையில் முதலீடு செய்யப்படலாம். அதன்படி, அதிகரித்த பணம் தேசிய சபையின் முன் அனுமதியுடன், இந்த முதலீடுகள் அரச வங்கிகளில் அதிக வட்டி விகிதத்தை வழங்கும் வங்கியின் சிறப்பு வட்டி விகிதங்களின் கீழ் (சாதாரண வட்டி விகிதத்தை விட அதிகமாக) செய்யப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இதன் விளைவாக வட்டி வருமானத்தால் நிதி மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வருடாந்த ஒதுக்கீட்டின் கீழ் திறைசேரியின் மூலமாக முதியோர்களுக்கான தேசிய செயகத்திற்கு பிரதான அடிப்படையில் வழங்கப்படும் நீதி முதலீட்டுத் திட்டத்திற்கான பிரதிபலிப்பாக பிரதிபைப்பாக இருக்காது. 2022 ஆம் ஆண்டில் பொதுச் செலவீனத்தின் மட்டுப்படுத்தப்பட்ட சில முதியோர்களின் நலன்புரித் திட்டங்களைச் செயல்படுத்த இயலாமையால் அதற்காகப் பெறப்பட்ட பணத்தின் ஒரு பகுதி ஆண்டின் இறுதியில் இருபாக இருந்தது. இருப்பினும் இந்தப் பணம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிகழ்ச்சி திட்டங்களுக்கு செலவிடப்பட்டது என்பதை நான் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) இந்த நிறுவனத்தின் இணைய தளத்தில் ரூபா. 2000/- கொடுப்பனவு தொடர்பாக பிரதேச செயலகம் மட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட முதியோர் தரவு தகவல் அமைப்பு இந்த நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. மேலும் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டபடி, முதியோர் சமுதாயத்தினரின் தகவல்களை உள்ளடங்களான தரவு அமைப்பைத் தயாரிப்பதற்கான தகவல்களை சேகரிக்குமாறு உத்தியோகத்திற்கு விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) அந்த நேரத்தில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அரசாங்கம் எடுத்த கொள்கைகளின் கீழ் 2021 ஆம் ஆண்டில் பின்னூட்டல் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டி இருந்தது. இந்த ஆண்டு முதல் தொடர் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் உள்ள இறப்பு வாகனங்கள் போதுமானதாக இல்லாததால், இந்த வாகனம் பனிப்பாளரின் அதிகாரப்பூர்வ வாகனமாக பயன்படுத்தப்படுவதற்கான

அனுமதியினை இராஜாங்க அமைச்சரின் செயலாளரினால் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது பணிப்பாளர் அவர்களின் பதவிக்கால முடிவடைந்ததையடுத்து முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பதில் கடமை பணிகபூர்வ வாகனமாக பயன்படுத்தப்பட்டது இந்நிலையில் இந்த வாகனம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் இருப்பு வாகனங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மகளிர் சிறுவர் அலுவலகங்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வாகனம் அந்த அமைச்சிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஏ)

(i) NSE/DEV/03/04/ மற்றும் 15.10.2018 தேதியிட்ட சுற்றறிக்கையின் 5.3 பிரிவின் படி பிரதேச செயலகத்தின் மூலம் NSE/DEV/EMA/EXR-002 இன்பாடி வழங்கிய அறிக்கைகளின் படி மாவட்ட செயலங்கள் மூலம் NSE/DEV/EMA/EXR-003 மாதாந்தி சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. அந்த அறிக்கைகளின் படி தகவல் தரவு அமைப்பில் தகவல்கள் உள்ளிடப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன் மேலும் 2020 ஆம் மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பிரதேச செயலகங்கள் மூலம் அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மேலும் மாவட்ட செயலகங்கள் மூலம் மாதாந்தி சுருக்க அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதோடு எதிர்காலத்தில் திட்டமிட்டபடி அறிக்கைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை குறிப்பிடுகின்றேன்.

(ii) ரூபா. 2,000/- உதவித்தொகை அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு மீதமுள்ள தொகை காசுக் கட்டளை (Money Order) மூலம் பிரதேச செயலகத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.அங்கு சம்பந்தப்பட்ட மாதத்திற்கு வழங்க வேண்டிய மீதமுள்ள தொகை உதவித் தொகை செலுத்தப்பட்ட மாதத்தில் பிரதேச செயலாளத்தால் பெறப்படவில்லை. மேலும் அடுத்த மாதத்திலும் வழங்குவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதோடு அந்த அறிக்கைகளில் வேறுபாடுகள் உள்ளன என்று விளங்குகின்றது. எனவே அறிக்கைகளை மீட்டெடுக்கும் போது சம்பந்தப்பட்ட மாதத்திற்கான அறிக்கைகளை அதே மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டு பிரதேச செயலாளர்களுக்கு விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது.

2.3 ஏனைய விடங்கள்

(அ) 26.102.2020 திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதில் மட்டுப்பாடு காரணமாக, அது தொடர்பான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவில்லை மேலும் புதிய ஆட்சேர்ப்புச் நடவடிக்கைகள் விரைவாக ஆட்சேர்ப்புச் செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதுவரை நிறுவனப் பணிகளை இடையூறு இன்றி நடாத்திச் செல்வதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கே.ஜி.லெனரோல்**
**பணிப்பாளர்**